விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டார்த் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா ,, 12-00
1 வருடச் சந்தா ,, 24-00

மானேஜர்:
"சுதந்திரன்"
194 A, தட்டார்த் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஹ ஐப்பசி மீ 4உ செவ்வாய்க்கிழமை — Colombo, October, 21. 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 6 | இதழ் 140

"எவ்வித அபாயங்களையும் சமாளிப்போம்"

யாழ்ப்பாணத்தின் புதிய அத்தியட்சகர்

"ஒத்துழைத்து வாழக் கற்க வேண்டும்"

யாழ்ப்பாணம், அக். 19

"மனிதர், உலகை உற்று நோக்குகையில் தமது தேசத்தினருக்கும் இதர தேசத்தினருக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டார்கள். அதே சமயத்தில் வேற்றுமையையும் பார்த்தனர். தனது தேசத்தில் அடிமைப்பட்டுகிடந்த காலத்தில் வேற்றுமைகளால் தயர் ஏற்பட்டவில்லை. இன்றே, ஒன்றுபட்டு இருக்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் உணர்ந்தனர். மனிதர் ஒத்துழைத்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். உலகம் ஒன்று அல்லது உலகமே இல்லை."

மேற்கண்டவாறு தமக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் பேசிய அதி. சங்கைக்குரிய அத்தியட்சகர் எஸ். குலேந்திரன் குறிப்பிட்டார்.

தென்னிந்திய திருச்சபையின் முதலாவது யாழ்ப்பாண பகுதி அத்தியட்சகராக நியமனமானது குறித்தே இவ்வரவேற்பளிக்கப்பட்டது.

வட மாகாண ஏஜெண்ட் திரு. ஹட்சன் தலைமை வகித்தார். எஸ். ஆர். கனகாயகம், வி. ஜோசப், எஸ். எச். பேரின்பநாயகம் முதலிய பலர் இக்கூட்டத்தில் பேசினார்கள்.

2000 டன் சிமிந்தி

இலங்கை வந்து சேர்ந்தது

கொழும்பு, அக். 20

கொச்சியிலிருந்து இன்று இலங்கை வந்து சேர்ந்த "அப் பெகேர்க்" என்னும் கப்பலில் 2000 டன் சிமிந்தி கொண்டு வரப்பட்டது. அது தவிர 1528 டன் இதர பொருட்களும் கொண்டுவரப்பட்டன.

கிரேப் ரப்பர் களவு

நால்வர் கைது

கொழும்பு, அக் 20

நேற்று காலை கொம்பெனித் தெருவில் உள்ள கீல் அன்ட் வால்டாக் கம்பெனியில் கள்வர்கள் பிரவேசித்தனர். மொத்தம் ரூபாய் 2500 பெறுமதியான கிரேப் ரப்பர் களவாடப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப சம்பவம் காரணமாக நால்வர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கையின் அரிசித் தேவை

கொழும்பு, அக் 20

இலங்கைக்கு மாதம் ஒன்றுக்கு 45,000 டன் அரிசி தேவை எனக் கூறி சர்வ தேச அவசிய உணவுக் கவுன்சிலுக்கு இலங்கை சார்பில் கேட்கப்பட்டுள்ளது; ஜனுவரியில் இருந்து இக்தொகை தரவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

புதுடில்லி, அக். 18

மிளகு ஏற்றுமதி மீதுள்ள கட்டுப்பாட்டை இன்றிலிருந்து [அக் 18] அடியோடு எடுத்துவிட இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது.

இந்திய சர்க்கார் கெஜட்டில் இது பற்றிய ஒரு அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

பிபிலி குன்றில் கொலையுண்டவர் பிரேதம்

மகளின் காதலன் சந்தேகத்தின் மீது கைது

கேகாலை, அக். 20

அரசாயகா போலிஸ் பகுதியைச் சேர்ந்த ஹத்கம் போலாவில் உள்ள சுரவீராஆராச்சிகே புஞ்சிரோலா என்பவரின் பிரேதம் பிபிலே குன்றிடையே கண்டுபிடிக்கப்பட்டது. முன் ஒரு வழக்கில் இவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இவருக்கு பிஸொமேனிக்கா எனறொரு மகள் இருப்பதாகவும் அப்பெண்ணை புத்ததாஸா என்பவர் காதலித்து வந்ததாகவும் அடிக்கடி இந்த இளைஞர் புஞ்சிராலாவின் வீட்டுக்குச் செலவது வழக்கமென்றும், புஞ்சிராலா, தனது மகளை புத்ததாஸா விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டதாகவும் புத்ததாஸா அதனைக் கடத்தியதாகவும் இவர்கள் இருவரும் புஞ்சிராலாவின் சேனைப் பயிர்களை அழிக்கும் குரங்குகளைச் சுடுவதற்கு துப்பாக்கிளுடன் பிபிலிக்குன்றுக்குச் செல்வது வழக்கமென்றும் தெரிவிக்கப்பட்டது. ஒரு நாள் புத்ததாஸா துப்பாக்கியுடன் வந்து புஞ்சிராலாவையும் அழைத்துக்கொண்டு பிபிலிக்குன்றுக்குச் சென்றதாகவும் பின்னர் புஞ்சிராலா வீடு திரும்பாததினால் புஞ்சிராலாவின் மனைவி தன் கணவனைப்பற்றி புத்ததாஸாவைக் கேட்ட போது புத்ததாஸா தனக்கு ஒன்றும் தெரியாதென்று கூறியதாகவும் பின் இவர்கள் தேடியவிடத்து துப்பாக்கி காயங்களுடன் குன்றில் இறந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டதென்றும் கூறப்பட்டது.

கேகாலை மாஜிஸ்டிரேட் திரு. ஏ. டபிள்யூ. நடராஜா ஸதலத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். போலிஸார் புத்ததாஸாவைச் சந்தேகத்தின்மீது கைது செய்து ரிமாண்டில் வைத்துள்ளனர்.

"உண்மை மதம் சடங்கில் இல்லை"

ராமகிருஷ்ண நிலையப் பிரசங்கம்

கொழும்பு, அக். 20

"இன்றைய அரசியல் வாழ்வில் மதம் மிகுந்த தொல்லைகளைக் களைப்பி விட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இது வெறும் சடங்கு ரீதியான மதம். உண்மை மதம் நாகரீகத்தின் மிகச் சுகந்தமான மலர். அது சடங்குகளிலும், பண்டிகைகளிலும், கோட்பாடுகளிலும் தங்கியிருக்கவில்லை."

ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சர்வ தேச கலந்தொடர்புபற்றிப் பேசுகையில் சுவாமி அஷேஷானந்தஜி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. டி. ஸ். ஆர். குணவர்த்தனா தலைமை வகித்தார். பேச்சாளரை அறிமுகப்படுத்திய சுவாமி சித்தாத்மானந்தஜி நியூயார்க்கில் உள்ள ராமகிருஷ்ண விவேகானந்த நிலையத்தில் சேவை செய்ய சுவாமி அஷேஷானந்தஜி செல்வதாகக் குறிப்பிட்டார்.

லக்னேவில் பண்டித நேரு கார்ஜன

லார்டு அடிஸன்-காந்திஜி ஒரு மணி நேரம் சம்பாஷணை

லண்டனுக்கு இந்தியா, பாக்கிஸ்தான் சேனதிபதிகள் பயணம்

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரலுக்கு காஷ்மீர் சர்க்கார் தந்தி

லக்னே, அக். 19

இன்று இங்கு நடைபெற்ற வகுப்பு சமரச மகாநாட்டில் இந்தியா பிரதம மந்திரி பண்டித நேரு பேசியபோது பின் வருமாறு தெரிவித்தார்:-

சுதந்திரமடைந்துள்ள இந்திய மக்கள் தங்களுக்குள்ள பெரும் பொறுப்பை உணர வேண்டும். நாட்டை எதிர் நோக்கி நிற்கும் கஷ்டமான பிரச்னைகளை சமாளிக்க மக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். நாட்டில் ராணுவ உதவியைக் கொண்டு பெடு நாட்கள் அமைதியை நிலைநாட்டிக்கொண்டிருக்க முடியாது. கலவரத்தால் ஏற்பட்ட நிலையை சமாளிக்க அரசாங்கம் தன்னால் முடிந்ததைச் செய்து கொண்டிருக்கிறது. இவ்வளவு சீக்கிரம் நிலைமை சமாளிக்கப்பட்டுவிட்டதைக் கண்டு வெளி நாட்டார் அதிசயிக்கிறார்கள். கிழக்குப் பஞ்சாப்பிலும் டில்லியிலும் நிலைமையை சமாளித்து விட்ட நாம் இதிலும் பெரிய அபாயங்கள் நேரிடினும் திறமையுடன் சமாளிப்போம். பிறர் ஆக்கிரமூட்டுவதால் கோபங்கொண்டு பழிச் செயல்களிலிறங்காது நாம் திறமுடனும் மனோ உறுதியுடனும் சீரிய செயலாற்ற வேண்டும். நவ இந்தியாவை சிருஷ்டிக்க நாம் நமது முழு பலத்தையும் திரட்ட வேண்டும். அந்த பலத்தை நாச கரமான செயல்களில் செலவிடலாகாது.

பாக்கிஸ்தானுக்கு காஷ்மீரத்தின் தந்தி

புதுடில்லி, அக். 19

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரலுக்கும் பிரதம மந்திரிக்கும் காஷ்மீர சமஸ்தான சர்க்கார் கீழ்க்கண்ட தந்தியனுப்பியிருக்கிறார்கள்:-

ஆகஸட் 14-ம் தேதியிலேயே அமுலிலிருந்து வரும் ஒப்பந்தத்தை மீறி பாக்கிஸ்தான் எடுத்துவரும் நடவடிக்கையால் காஷ்மீர் சமஸ்தானத்திற்கு பல தொல்லைகள் ஏறபட்டு வருகின்றன. மேற்குப் பஞ்சாப்பிலிருந்து பெட்ரோல், ஆயில், உணவுப் பொருள், உப்பு, சீனி, புடவை வருவதில்லை. தபால் தந்திப் போக்குவரத்தும் தடைப்படுகிறது. பாக்கிஸ்தான் ரேடியோ காஷ்மீரத்திற்கு விரோதமாக பொய்ப் பிரசாரம் செய்து வருகிறது. காஷ்மீருக்குக் கீழுள்ள சிறு சமஸ்தானங்கள் எங்களுக்கு விரோதமாக தூண்டிவிடப்படுவதுடன் ஆயுதபாணிகள் படையெடுப்பும் நடைபெறுகிறது. ஆதலால் தாங்கள் இது விஷயத்தில் நேரில் தலையிட்டு இந்த அக்கிரமங்களை யொழிக்க முன்வர வேண்டும். அப்படிச் செய்யாவிடில் இந்த அக்கிரமங்களுக்கு பாக்கிஸ்தான் சர்க்கார் உடந்தையாக இருப்பதாகக் கருதப்படும்.

ஹைதராபாத் சமரசப் பேச்சு

ஹைதராபாத் தூதுக் கோஷ்டி இன்னும் இந்திய சர்க்காருடன் சமரசப் பேச்சு தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

250 கோடி ரூபாய் தேவை

இந்திய அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர் இவான் சமன்லால் ரேடியோவில் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:-

மேற்குப் பஞ்சாப்பிலும் எல்லை மாகாணத்திலுமுள்ள 18 லட்சம் ஹிந்து சீக்கிய அகதிகளை பாக்கிஸ்தானிலிருந்து வெளியேற்றி இந்தியாவில் குடியேற்ற 250 கோடி ரூபாய் செலவாகும். பாக்கிஸ்தான் மைனாரிட்டிகளான ஹிந்து சீக்கியர் வெளியேற்றத்தைத் தங்களுக்கு அனுகூலப்படுத்திக் கொண்டு அங்கு பிரிட்டிஷார் வியாபார ஸ்தலங்களை நிறுவி வருகிறார்கள். பிரிட்டிஷ் பத்திரிகைகள் செய்துவரும் பொய்ப் பிரசாரத்தின் காரணம் இப்பொழுது தெரிய வருகிறது. மிகப் பிற்போக்கான சில பிரிட்டிஷ் அதிகாரிகளை முஸ்லிம் லீக் பாக்கிஸ்தானில் உத்தியோகங்களில் அமர்த்தியிருக்கிறது.

லார்டு அடிஸன்-காந்திஜி சம்பாஷணை

லார்டு அடிஸன் கான்பெரா மகாநாட்டுக்குச் சென்று பிரிட்டனுக்கு திரும்பும் மார்க்கத்தில் நேற்று கராச்சிக்கு வந்து இன்று இங்கு வந்து தங்கியிருக்கிறார். இந்தியாவின் தற்போதைய நிலைமைபற்றி அவர் மகாத்மா காந்தியைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். நாளை கராச்சி சென்று ஜனப் ஜின்னாவைச் சந்தித்துப் பேசுவார்.

மகாத்மாவுடன் ஷேக் அப்துல்லா சம்பாஷணை

காஷ்மீர் தேசிய தலைவர் ஸ்ரீ ஷேக் முகம்மது அப்துல்லா, இன்று மாலை மகாத்மா காந்தியைச் சந்தித்து ஒருமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்திற்கும் போயிருந்தார்.

ஸ்ரீ அப்துல்லா அநேகமாக புதன்கிழமை காஷ்மீருக்குத் திரும்புவார்.

பாராளுமன்ற கமியூனிஸ்ட் அங்கத்தினர்கள்

கொச்சிக்கடையில் வரவேற்பு

கொழும்பு, அக். 21

கொச்சிக்கடையில் நேற்று முன்தினம் கமியூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் திரு பீட்டர் கெனமன் பேசுகை யில் இலங்கையின் பரிபூரண சுதந்திரத்துக்காகவே தாங்கள் முயற்சி செய்வதாகவும் தேர்தல் காலத்தில் தாங்கள் வெளியிட்ட அறிக்கைகளில் தாங்கள் கையாளப்போகும் நடவடிக்கைகள்பற்றி தெரிவித்துள்ளதாகவும் அவற்றை நிறைவேற்ற தாங்கள் கடைசி வரையும் பாடுபடுவோமென்றும் கூறினர்.

நான்கு பிரசவங்களில் 10 குழந்தைகள் ஜனனம்

ஒரு பிரசவத்தில் 4 குழந்தைகள்

கல்கத்தா, அக். 19

ஹௌராஜில்லாவில் மந்தாக் யூனியனிலுள்ள பான்பெரியா என்னும் கிராமத்தில் ஒரு வகுப்பு ஹிந்து பெண்ணுக்கு ஒரே சூலில் 4 குழந்தைகள் கர்ப்பந் தரித்து இன்று பிரசவமாயிற்று. ஒரு ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தன. குழந்தைகளும் தாயும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். இதே பெண் இதற்கு முன் மூன்று தடவை இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிறாள். ஆகவே நான்கு பிரசவங்களிலும் இப்பெண்ணுக்கு 10 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. (அ-பிரஸ)

ஜெயப்பிரகாஷ் பேச்சு

அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் சங்கத் தலைவர் ஸ்ரீ ஷேக் அப்துல்லாவை இந்திய சோஷியலிஸ்டு கட்சித் தலைவர் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் சந்தித்து ராஜீய நிலைமை, சமஸ்தானங்களில் போராட்டம் ஆகியவைகளைக் குறித்து விவாதித்தார்.

சிம்லாவிலிருக்கும் காஷ்மீர் அகதிகள் 3000 பேரை பார்க்க ஸ்ரீ அப்துல்லா நேற்கட்கிழமை சிம்லா போகிறார்.

சத்யாக்ரஹம் செய்ய ஸ்ரீ சுஹ்ரவர்தி தயார்

கராச்சி, அக். 16

இந்து முகாணத்தில் அமைதி ஏற்படுத்தும் விஷயத்தில் சர்வ கட்சி சமாதான போர்டு வெற்றியடையுமென்று தாம் நம்புவதாக வங்க மாஜி பிரதமர் ஸ்ரீ சுஹ்ரவர்தி கூறினார்.

நிலைமையில் முனேற்றம் ஏற்படவில்லையானால், சத்யாக்ரஹம் செய்வதற்கு முஸ்லிமல்லாதவர்கள் தொண்டர் படை திரட்ட வேண்டுமென்றும், தாம்கூட சத்யாக்ரஹம் செய்ய நேரிடலாமென்றும் ஸ்ரீ சுஹ்ரவர்தி தெரிவித்தார்.

சிந்துவில் மைனாரிட்டிகள் சத்யாக்ரஹம் நடத்தினால் அதில் தீவிரமாக பங்கெடுத்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

பர்மா பிரதமர் திரும்புகிறார்

சீனத்தில் பிரிட்டின் தூதுக்கோஷ்டி

லண்டன், அக். 19

இங்கு வந்திருந்த பர்மா பிரதம மந்திரி தக்கின் நு, நிதி மந்திரி உடின் டுட், பிரதம நீதிபதி வின்மாங், போலிஸ் தலைவர் உடுன்லின் ஆகியோர் பர்மாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

சீனத்தில் சுற்றுப் பயணம் செய்யும் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் தூதுக்கோஷ்டி இன்று டீன்ஸ்டின் நகருக்கு விஜயம் செய்தன.

அமெரிக்காசென்றுள்ள இந்தியா காங்கிரஸ் போர்டு அங்கத்தினர் திரு. ஜே. கே. ஜெயின் இந்தியா திரும்பும் மார்க்கத்தில் அக்டோபர் 30-ம் தேதி லண்டன் வருவார். இவர் அமெரிக்காவில் ஏராளமான அச்சு இயந்திரங்களும் மையும் காகிதமும் வாங்கியிருக்கிறார்.

இந்தியாவில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட இந்திய ஆராய்ச்சி கவுன்சில் வைத்திய டாக்டர் இன்று பம்பாயிலிருந்து நியூயார்க் போய்ச் சேர்ந்தார். அமெரிக்காவிலும் கானடாவிலுமுள்ள தேசிய ஆராய்ச்சி கவுன்சில்கள் எவ்விதம் வேலை செய்கின்றன வென்பதைப் பரிசீலனை செய்வார். (ராய்ட்டர்)

வெங்காயத்தில் கொள்ளை லாபம்

எதிர்க்குரூ.200 அபராதம்

கொழும்பு, அக். 20


கொழும்புக்சேரி வீதியைச் சேர்ந்த எஸ். குமாரசாமி என்பவர் ஒரு முத்தல் வெங்காயம் 12 சதமாக கட்டுப்பாட்டு விலை யிருக்க முத்தல் 60 சதமாக விற்றதாக குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட். திரு பண்டித குணவர்தனு எதிரிக்கு ரூ. 200 அபராதம் விதித்தார்.

5 யூதப் புரட்சிக்காரர்கள் கைது

உளவறிய சிரியாவுக்குள் சென்றவர்கள்

ஜெருசலேம், அக். 20

சட்ட விரோதமான யூதப் புரட்சிக்காரர் ஸ்தாபனமான ஹகானாவைச் சேர்ந்த 5 யூதர்கள் சிரியாவிலுள்ள அராபிய ராணுவ நிலைமைபற்றி உளவறிய பலஸ்தீன எல்லையைக் கடந்து சிரியா சுவுக்குள் சென்றபோது சிரியா ராணுவதார் அவர்களைக் கைது செய்தனர். (ராய்ட்டர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வதந்த ஞ ஐப்பசி மீ 4 உ
செவ்வாய்க்கிழமை

விஷமப் பிரசாரம்?

கூடா, கன்று போட்டது என்ருனும் ஒருவன். அடுத்தவன் கயிற்றை எடுத்து கட்டு என்ருன் இந்த முறையிலிருக்கிறது சில சிங்கள அரசியல் வாதிகளும், அவர்களுக்குப் பக்க பலம் கொடுக்கும் சில சிங்களப் பத்திரிகை ஆசிரியர்களும் இலங்கையில வகுப்புவாதத் தீயைப் பெருக்குவதற்குச் செய்யும் முயற்சிகள். இவர்கள் தமிழ் மக்கள் மீது, சிங்களப் பொது மக்களின் ஆத்திரத்தைத் தூண்டுவதற்காகச் செய்துவரும் விஷமப் பிரசாரங்களை நாம் பல தடவைகளிலும் எடுத்துக் காட்டிவந்துள்ளோம். இன்னும் அவர்கள் அதைக் கைவிட்டபாடில்லை.

இம்மாதம் பதினெட்டாம் தேதி வெளிவந்த ஒரு சிங்களப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தில், "யாழ்ப்பாணத் தொகுதி தேர்தல் நடந்த தினத்தன்று பின்னேரம், தனது ஆதரவாளர்கள் முன்னிலையில் பேசுகையில், தேர்தலில் திரு. மகாதேவா வெற்றியடைந்திருந்தால் எல்லாச் சிங்களவர்களையும் தம்பட்டம் அடித்துத் துரத்துவோமென்றும்; அடுத்த தினம் இன்னுமோரிடத்தில் பேசுகையில் பாராளுமன்ற ஆரம்ப தினக்கன்றே, அதற்கு முன்னரோ, பின்னரோ யாழ்ப்பாணத்தில் இருக்கிற சிங்களவர்கள் சிங்கக் கொடியை உயர்த்துவார்களானுல் அவர்களை அடித்து உதைத்து தெற்கே துரத்துவோம் என்றும் திரு. பொன்னம்பலம் கூறியதாகயாழ்ப்பாணத்தில் இருக்கிற சிங்களவரொருவர் எழுதிய நீண்ட கடிதமொன்று எங்கள் கையில் இருக்கிறது" எனக் கூறப்பட்டிருக்கிறது. இப் பத்திரிகையின் சொந்தக்காரரோ ஒரு பொறுப்புவாய்ந்த சிங்கள மந்திரியார் என்று நாம் அறிகிறேம். அக் கூற்று உண்மையாயிருந்தால் இம்மந்திரியாரே இவ் விஷமப் பிரசாரத்தைச் செய்விக்கின்ருர் என்பது தெற்றென விளங்கும்

யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மக்களும் தமிழ் மக்களும் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ்ந்துவருகிறார்கள். அவர்கள் சென்ற பொதுத் தேர்தலில் திரு. ஜி. ஜி பொன்னம்பலத்தையே ஆதரித்து வாக்களித்தார்களென்பதும் எவருக்கும் தெரியும். அப்படியிருக்க இச் சிங்களப் பத்திரிகை ஆசிரியருக்கு இந்தமாதிரியான பொய்ப் புகார்களுடன் ஒரு கடிதம் வந்துள்ளதென்பது வெகு விநோதம். ஒன்றில் அவ்வாசிரியரே இதைப் புனைந்தெழுதியிருக்க வேண்டும், அல்லது இவ்வாறு ஒன்றை ஒருவரை எழுதச் தமக்கு ஆதாரமாக அனுப்புப் படி கேட்டிருத்தல் வேண்டும் எவ்விதமாயிருந்தாலும், இக் கடிதத்தை முற்றுகப் பிரசுரித்திருக்கவேண்டியது ஆசிரியரின் கடமை அதுவுமல்லாமல் அதை எழுதியவர் பொறுப்புள்ளவரா என்பதையும் ஆராய்ந்திருக்க வேண்டும். விஷயங்களை நன்முக அலசிப்பார்த்து சொந்த விருப்பு வெறுப்புகளை நீக்கி, பாரபட்ச மற்ற தன்மையில் நிதான புத்தியுடன் எழுதுவதே "தலையங்கம்" என்ற ஸ்தானம் பெற யோக்கியதை உடையதாகும்

தென்னிலங்கையில் வதியும் தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமையாகவே இருக்கிறார்கள். இங்கு வாழும் தமிழ் மக்கள் மீது சிங்களப் பொது மக்களின் ஆத்திரத்தைத் தூண்டினுல்தான் சிங்கள அரசியல் வகுப்புவாதிகள், தமிழ் மக்களை வகுப்பு வாதிகளாகச் செய்ய முடியும். ஏன்? பதிலுக்குப் பதில் ஒருவேளை சில தமிழ் மக்களும் ஏதாவது செய்வார்களல்லவா என்பது சிங்கள அரசியல் வாதிகளின் நோக்கம் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கு இத்தகைய வகுப்புத் துவேஷத்தைக் கிளப்புவது எவருக்கும் நன்மை பயக்காது.

இலங்கையிலிருந்த அமெரிக்க இராணுவத் தளவாடங்கள்

சர்க்கார் வாங்கி விற்றதால் ரூ 7 லக்ஷம் லாபம்

கொழும்பு, அக். 21

யுத்த காலத்தில் அமெரிக்க இராணுவத்தினர் இலங்கைக்கு ஏராளமான பொருள்களைக் கொண்டு வந்திருந்தனர். யுத்தம் முடிந்த பின்னர் இங்கு மேலதிகமாக இருந்த தமது பொருள்களை வாங்கும்படி இலங்கை சர்க்காரை அமெரிக்க ராணுவ அதிகாரிகள் கேட்டிருந்தனர். இலங்கை சர்க்காரால் யுத்த பிற்கால வேலைகள்பற்றி இட்டங்கள் வகுக்கு வேலைகளைச் செய்ய நியமிக்கப்பட்டிருந்த உப கமிட்டி அப்பொருள்களை ரூ. 1,650,000 க்கு வாங்கியிருந்தது இப்பொருள்களை பின்னர் ஏலத்தில் விற்பனை செய்ததினுல் இலங்கை சர்க்காருக்கு செலவுகள் போக 7 லக்ஷ ரூபாய்களுக்கு மேல் லாபம் கிடைத்துள்ளது.

யுத்த காலத்தில் யுத்த தளவாடங்கள் என்று கூறி சுங்கவரியின்றி இப்பொருள்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. இப்பொருட்களை பொதுமக்களுக்கு இலங்கை சர்க்கார் எடுத்து விற்பனை செய்ததினுல் சுங்க இலாகாவுக்கு சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் வரியாக செலுத்தப்பட்டது. மிகுதியான சுமார் நாலரை லக்ஷம் ரூபாயும் இலங்கை சர்க்காரின் பொது வருமானத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

ரூ. 10,000 மோசடியா?

கம்பெனி மானேஜிங் டைரக்டர் மீது வழக்கு

கொழும்பு, அக். 21

நுகயகொடையைச் சேர்ந்த திரு எஸ். ஜே. கோதாரி என்பவர் சிங்கம் பிரதர்ஸ் அன் கம்பெனி (இலங்கை) லிமிடெட்டில் மானேஜிங் டைரக்டராக இருந்ததாகவும் 1945-ம் வருடம் டிசம்பர் 14-ம தேதி அக் கம்பெனிக்குச் சொந்தமான ரூ. 10,000 சம்பந்தமாக நம்பிக்கை மோசம் செய்ததாகவும் ஈஸ்டர்ன் வங்கியிலிருந்து இவர் எடுத்த கம்பெனியின் பணம் ரூ 11,000 மாக இருக்க, கம்பெனி கையிருப்புப் புத்தகத்தில் ரூ. 1000 தான் ஈஸ்டர்ன் வங்கியில் எடுத்ததாக எழுதப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டி ஒரு வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சனிக்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாஜிஸ்டிரேட் திரு. வி. டி. பண்டித குணவர்தனு எதிரியை ரூ. 10,000 பிணையில் விடுக்து விசாரணையை இம்மாதம் 27-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

மத்தியதரைக் கடலில் மூழ்கிய விமானம்

பாரிஸ், அக். 19

இரண்டு நாட்களுக்கு முன் மத்தியதரைக் கடலில் கார்ட்டகெனுவுக்கு அப்பால் (ஸபெயின்) வீழ்ந்த விமானத்தில் 39 பிரயாணிகளும் 4 விமானிகளும் இறந்தனரென்றும் இவர்களில் 1 விமானியும், 1 பிரயாணியும் காப்பாற்றப்பட்டனரென்றும் 5 பிரேதங்களும் அகப்பட்டுள்ளனவென்றும் பாரிலுள்ள "இன்டர்கான்டினன்டல்" விமானப்போக்கு வரத்து கம்பெனி ஊர்ஜிதப்படுத்தியுள்ளது. மிகுதியானவர்களும் இறந்திருக்க வேண்டுமென்று படப் படப்படுகிறது. எஞ்சினில் கோளாறு ஏற்பட்டே விமானம் விபத்திற்குள்ளாகியிருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது.

(ராய்ட்டர்)

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தேர்தலில் வெற்றி பெற்றதும் சிங்கள மக்களுடன் தமக்கு ஒரு விதமான துவேஷமும் கிடையாதென்றே கூறினர். அதற்கு முன்பும் அதையே சொல்லி வந்திருக்கிறார். இதைத்தான் தமிழ் மக்களும் அனுபவ ரீதியாகக் கையாண்டு வந்திருக்கிறார்கள், வருகிறார்கள்; கையாண்டு வருவார்கள். ஆகவே கடா, கன்று போடவும் மாட்டாது; சிங்களப் பத்திரிகை யாசிரியர் அதைக் கயிறெறுத்துக் கட்டவும் தேவையில்லை.

தமிழ் சாகியத்தை தட்டி நொருக்க சில சிங்களவர் சதி

சிங்களத் தலைவர்களும் பத்திரிகைகளும் செய்து வரும் சூழ்ச்சியும் பிரசாரமும்

போதிய பிரசாரமின்றி கட்டுக் குலைந்துள்ள தமிழ் மக்கள் கண் விழிப்பார்களா?

திரு. கூரேயின் கூற்றுக்கு ஆப்பு

(நீர்கொழும்பு எஸ். பரமசாமி)

இந்த அக்டோபர்மாதம் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த ஒப்ஸேவர் பத்திரிகை காலைப் பதிப்பில் "பிரான்சிஸ் கூரே" என்ற நாமதேயங் கொண்ட ஒருவரால், "இந்தச் சிறுபான்மைப் பிரச்னை" என்று தலையங்கமிட்டு எழுதப் பட்ட கட்டுரையைக் கண்ணுற்றேன். அவர் எழுதிய கட்டுரையின் இரண்டாவது பாரா, முதல் வசனத்திலே எங்கள் தமிழ்ச் சிநேகிதர் உணர்ந்து மனதிற் பதிக்க வேண்டிய முக்கிய விடயம் என்று தொடங்கியிருக்கிறார். ஒரு சிங்களவர் தமிழர், சிங்களவர் என்றிழுத்து வாசிக்கும்பொழுது அது சாதிய வாதமல்லவாம். ஆனால் தமிழ்த் தலைவர் கனம் ஜீ. ஜீ. பொன்னம்பலம், தமிழர் என்றுவாதித்தாலோ அது சாதிய வாதமென்றே சாதிக்கிறார் கனம் பிரான்சிஸ் கூரே. இதுதான் அவருடைய விதண்டாவாதம். சிங்களவர் தமிழர் என்ற பதத்தை நீக்கி இருசாதியாரும் தங்கள் காரியதரிசியை விவாதிக்க ஒரு வழி காட்டியிருந்தால் அவரை ஒரு உண்மை மகான் தானென்று யாரும் ஒப்புக் கொள்வர். அவ்வாற்றலின்றித் தமிழர் தமிழர் என்றிழுத்துப் பேசும் சிங்களப் பெரியாரின் குதர்க்கவாதத்தைக் கண்டு பள்ளிச் சிறுவர்களும் பரிகாசம் செய்யா நிற்பர்.

அஃதங்ஙனமாக மேற்படி பாராவில் தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையின்றி பல நூற்றுண்டுகளாய் இலங்கையிலே ஒருங்குவாழ்ந்து வந்தனர்என்று கூறுகிறார் கனம் பிரான்சிஸ் கூரே. அவர் கூற்றை அப்படியே வைத்துக் கொண்டு பரிசீலனை செய்தால் பல நூற்றுண்டுகளாய் தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையிலலாதிருந்தும் ஒருமித்து வாழ்ந்ததற்கு ஏதோ நியாயமிருக்கவேண்டுமல்லவா? அதுமட்டும் மேற்படி கட்டுரையாளரின் கருத்திற் கெட்டக் கூடியதன்று போலும். இரண்டாவதாக தமிழ் மகாஜனங்களுக்கும் சிங்கள மகாஜனங்களுக்கும் இடையில் வளர்ந்து வரும் சிநேக மனப்பான்மையைக் கண்டு முன்னிருந்த கசப்பெல்லாம் நீங்கி இருசாதியும் ஒற்றுமைப்பட்டு இலங்கையை இடமாகக் கொண்டு அந்நியோந்நிய வாழ்க்கை நடத்துங் காலம் வரும் என்றும் எண்ணியிருந்தோம் என்று சொல்லிக் காட்டியிருக்கிறார் கனம் பிரான்சிஸ் கூரே. அவர் சொல்லுவது உண்மையே. ஆனால் அவர் பேசுவது குதர்க்கவாதமே. அததகைய சிநேகபான்மை யோடிருந்து வாழ்ந்து வந்த தமிழ் மகாஜனங்களுக்கும் சிங்கள மகாஜனங்களுக்குமிடையிலே இருந்தாப்போல் இத்தனை பிரமாதமான கசப்பை உண்டுபண்ணி விட்டது யார்? சேனநாயக்காவின் மடியிலே கட்டிவிடப்பட்ட சுதந்திரமாட்சி சரித்து நடக்கக்கூடிய நுண்ணறிவாளர் இல்லையென்பதாம். வித்தையிலும வீரதீரத்திலும் பேர் பெற்ற ஹிட்லரும் ஜெர்மனியும் எங்கே? சர்வாதிகாரத்தில் பேர் பெற்று விளங்கிய முசோலினி எங்கே? பெரும்பான்மையினுல் பேர்பெற்று விளங்குவது பெருமையல்லவே. பெரிது சிறிதாவதும் சிறிது பெரிதாவதும் உலக வியல்பு. பதட்டம்வேண்டாம். மூன்றுவது உலகமகாயுத்தத்தையுமளங்கோக்காணச் செய்ய இலங்கையிலே இப்போவே நடவடிக்கைகள் தொடங்கி விட்டது என்றே கூறவேண்டியிருக்கிறது.

இந்தியாவை விட்டு வெளியேறும்பொழுதுகூட பிரித்தானியர் பிரித்தாளும் சம்பிரதாயத்தை இந்தியாவில்செலுத்தாமல் விடவில்லை. இன்னும் ஜின்னு அவர்களை உதவிக்கு அழைபாமல் விடவில்லை. இலங்கையை இரண்டு படுத்தாவிட்டால் அவர்கள் போடும் தாளத்துக்கு ஆடுவது யார்? சேனநாயக்காவுக்கு அஷ்டைஸ்வரியத்தைக் கொடுத்த பிரித்தானியருக்கு இலங்கையை அடைவாகக் கொடுத்தாலும் ஈடாகாதென்றே மக்களையும் ஈடாக்க நினைக்கலாம். மூன்றுவது மகாயுத்தத்தின்போது இலங்கையை நிலக்களனுகக் கொண்டு இன்று இந்துமகாசமுத்திரத்திலே ஆதிக்கம்செலுத்த பிரித்தானியர் எண்ணியிருக்கலாம். அதன் பொருட்டு இலங்கையிலே தமக்கு மாறில்லாத ஒரு பிரதமரை ஆளாக்கி வைத்திருப்பதும் தீர்க்கதரிசனமே. ஆகையினுல் சேனநாயக்கா மண்ணையும் பொன்னென்று வாங்கப் பின்னில்லார்.

அஃதங்ஙனமாக மேற்படியாரின் மூன்றுங்கட்டத்தின் முதற் பராவிலேதமிழரையுஞ்சிங்களவரையும் பிரித்து வைத்து இலங்கைராஜாங்கத்திலே சிங்களவரைப்போலதமிழருக்கும்சம உரிமைகேட்கிறார் பொன்னம்பலம் என்று கனம கூரே கரைகிறார். அப்படிக் கேட்டால் தமிழ்நாடு நாசமாக அதுவே காரணமாகுமென்றும் ஒரு சிங்களக் கெரடியும் விட்டுக் காட்டுகிறார். சிங்களவரின்சுதந்திரம் ஐரோப்பாவிலிருந்து வந்திறங்கியிருப்பது மெய்தான். ஆனுல் தமிழரின் சுதந்திரம் இலங்கையிற்றானிருக்கிறது. தமிழரும் இலங்கையிற் தானிருக்கிறார்கள். சுதந்திரம் தூக்கப்பறிக்கக்கூடிய ஒருபொருளலவாதலால் அதைத் தூக்கிக் கொடுக்கும்படி யார் கேட்பார்கள்.

மலாயாவிலே வசிக்கும் இலங்கைத் தமிழரை இலங்கையரென்று மலாயா இராஜாங்கத்தை நம்பப்பண்ண கனம துரை சிங்கம் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார் என்று நடுங்கநடுங்கக் கூறுகிறார் கனம் பிரான்சிஸ் கூரே. இலங்கையரை இலங்கையர் என்று சொன்னுற் போதாதா? நமப் பண்ணுவதென்று ஒரு விதண்டாவாதம் பேசுகிறார் மேற்படி கட்டுரைக்காரர். மலாயாவிலே வசிப்பவர்களாகிய தமிழர் அந்த இராஜாங்கத்தினிடத்திலே தங்களுக்குச் செலவுபடியாக வேண்டிய உரிமைகளைக் கேட்டால் இலங்கையில் வசிக்கும் இந்தச் சிங்களமிதாவிக்கு வயிற்றெரிச்சல் பிடிக்கக் காரணமென்ன? இந்தச் சம்பளமில்லா உத்தியோகத்தை இதுவரை அறிந்த ஒரு தமிழ் மகன் இவர் தலையில் சுமத்திவிட்டிருக்க வேண்டும். பாவம். ஏன் இந்தச் சிங்கள மகான் மலாயாவுக்குப் பறந்து சென்று இலங்கை,தமிழ நாடல்லவென்று திருப்தி விட்டு வரலாமே. அங்ஙனம்செய்தால் வயிற்றெரிச்சலும் குறைந்து போகும். சோலபரி என்ற பட்சபாதக் கமிஷனிடத்திலும் பிரித்தாளும் ஆங்கிலசம் பிரதாய ஆட்சியிலும் செலுத்திய செல்வாக்கை மலாயா இராஜாங்கத்திடத்திலும செலுத்திப் பார்க்கலாமே. அங்கும் செலுத்தித்தான் பார்த்திருப்பார்! வாலுக்குத்தக்க நீட்டம்தானே நீட்டலாம்.

வாய் புளிப்போ மாங்காய் புளிப்போ வென்றையுறும் நிலையில் இலங்கையின் பூர்வ நிலையுணர்ச்சி சற்றுமில்லா கனம் பிரான்சிஸ் கூரே போன்ற சிங்கள எழுத்தாளர் சிலர் இருபதாம் நூற்றுண்டிலே இலங்கையில் குளம்பினர்கள். அதற்கெனச் சில பத்திரிகைகளையும் பிறப்பித்தார்கள். தமிழரை வேண்டியமட்டும்வாய்கூசாமல் ஏசினர்கள். உண்மையைத் திரித்து தம்மெண்ணம்போல் எவ்வளவோ புகார்களை உண்டு பண்ணினர்கள். ஆனுல் முடிவென்ன? பழைய குருடி கதவைத் திறவடி யென்றமிற்ற. இலங்கையிலே சிங்களவருக்குத்தான் உரிமையுண்டென்றும் இந்தியருக்கு உரிமை யில்லையென்றெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ இதுவரை எழுதிவந்தார்கள். இப்பொழுதுதான் எழுத்தின் வன்மையைக் காட்டவும் வாலை நீட்டவும் கைவரிசை காட்டவும் வெளிக்கொண்டிருக்கிறார்கள். சோல்பரிக் கமிஷனும் இராஜ காரியதரிசியும் சேனநாயக்காவும் சேர்ந்துபண்ணிய ஒரு பக்கஇராஜாங்கத்தில் சிறுபான்மையர் வாயற்ற பூச்சிகள் என்ற அளவாயிருந்ததால் அந்த இராஜாங்கமே கப்பலேவிட்டிறங்கித் தன் கட்சிப் பலமேனும் பெருத சேனநாயக்கா வீட்டைத் தேடித்திரியும் வேகியிலேயே "கொல்லத்தெருவில் ஊசி விற்பார்" போன்று இந்தியத் தமிழரிடத்திலே பேசிய அதே குதர்க்கவாதத்தையே இலங்கைத் தேசாதிபதியாகிய நம்மிடத்திலும் கனம் பிரான்சிஸ் கூரே போன்ற புல்லறிவாளர் சிலர் தம் பத்திரிகைகளிலே ஒரு சிறு நுழைப்பு நுழைத்துப் பரீட்சை பார்க்கின்றனர். நம் மூதாதையர் நாடே இலங்கை என்பதை மேற்படி எழுத்தாளர் கேள்விப்பட்டதுமில்லையோ? இலங்கையை ஆண்டவர்களும் நம் மூதாதையர் என்பதை கனம் பிரான்சிஸ் கூரே போன்றவர்கள் பள்ளிக்கூடத்திலே படித்திருக்கவேண்டும்.

அஃதங்ஙனமாக ஐஸ்வரியத்தைக் குப் போனபோன குபேரமகாராஜாவின் நாடாகிய வட இலங்கை இன்னும் தனித் தமிழ் நாடாயிருப்பதையும், கனம் ஜீ. ஜீ பொன்னம்பலம் தமிழரின் தனித் தலைவராயிருப்பதையும், சிங்களவருக்கு சேனநாயக்கா இருப்பதுபோல் தமிழருக்குப் பொன்னம்பலம் இருப்பதையும் சென்றதேர்தல் மூலமாவது உணர்ந்துகொள்ளவியலாத கனம் பிரான்சிஸ் கூரேயா இராச்சிய பரிபாலன விளக்கம் செய்ய முன்வந்திருக்கிறார்? இவர் எழுதிப்படித்தாலும் தேசீயஇராஜ ஞானம் இவருக்குண்டாகுமா? அவர்எடுத்த எடுப்பையும் தாளத்தையும் தவறவிட்டு அபசுரத்திலேசிங்களவர் இலங்கையை விட்டால் இருக்க இடமில்லையென்று பல்லவி தொடங்கினவர் அனுபல்லவி எடுக்க வகையறியாது பொன்னம்பலம் என்று புலம்பிவிட்டார். சிங்களவர் இலங்கையை என் விடுவான் என்பதையும் யார் விடச்சொல்லிக் கட்டளை பிறப்பித்ததென்பதையும் வாசகர்களே மேற்படி கட்டுரைக்காரரிடத்திலே கேட்டறிந்து கொள்ளுமாறு விடுத்தாம்.

அஃதங்ஙனமாக தமிழ் நாட்டினர் அறிவைச் சிதறடித்து அவர்களை ஒருவரோடொருவர் ஒட்டாவகை பிரித்து மேய்ப்பனில்லா மந்தையாக்கி தமிழரைத் தமக்குத் தொண்டாளாக்குவோ மென்றுறுதிகொண்டெழுந்த சிங்களப் பிரசாரகர், தமிழிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பத்திரிகை மூலம் தம் பிரசார வேலையைத் தொடங்கினர். அதற்குச் சாதகமாய் தமயனைக்கொல்ல சத்துராதிக்கு வழிகாட்டிக்கொடுத்த வீபீஷணன்போன்ற ஒன்றிரண்டு கடைகெட்ட தமிழரை விலைக்கு வாங்கித் தம் பக்கல் வைத்துக்கொண்டு அவர்களைக் காட்டிப் பாமர ஜனங்களையெல்லாம் தலைதடுமாறச் செய்துவிட்டனர். அப் பத்திரிகைகளைப் படி

(4-ம் பக்கம் பார்க்க)

ஐந்துலட்ச ரூபாய் பெறுமதியான நிலங்கள் நன்கொடை

தமிழ்க் கலை, தமிழ் இசை அபிவிருத்திக்கு உதவி

திருப்பனந்தாள்காசிமடத்தலைவர் ஏற்பாடு

திருப்பனந்தாள், அக், 19

ஸ்ரீலஸ்ரீ காசி வாசி அருள் நந்தி தபோதிரான ஸ்வாமிகள் திருப்பனந்தாள் காசிமடத் தலைவர் தமிழ்க்கலை, இசை இவைகளின் வளர்ச்சிக்காக சுமார் 5 லக்ஷ ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொந்தப்பட்டா நிலங்களை நன்கொடையாக எழுதி வைத்து அதன் பரிபாலனத்திற்கும தக்க ஏற்பாடு செய்துள்ளார்கள்.

திருப்பனந்தாளில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ காசி வாசி சுவாமிநாத ஸ்வாமி சுவாமிநாத செந்தமிழ்க்கல்லூரிக்கு மாயவரம் கும்பகோணம் தாலூக்காக்களில் சுமார் இரண்டரை லக்ஷ ரூபாய்க்கு மேல் மதிப்புள்ளதும் வருஷ வருமானம் ரூ. 12,000-க்கு மேற்பட்டதுமான 251 ஏக்கர் நிலங்களும் அளித்துள்ளார்.

இந்த கல்லூரி சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு சென்னை சர்வகலாசாலையுடன் இணைப்புற்றது. இக் கல்லூரியுடன் இணைக்கப் பட்டிருக்கும் இசைத் தமிழ் வளர்ச்சிப் பகுதிக்கு ரூ. ஒன்றரை லக்ஷம் மதிப்புள்ள மன்னார்குடி தாலூகாவில் சொந்தப்பட்டா நிலம் 200 ஏக்கர்களும் மேற்படி கல்லூரியில் படிக்கும் தகுதியுள்ள ஏழை மாணவர்களுக்கு உணவளிக்க வருஷ வருமானம் ரூ. 5000 மும், சுமார் ஒன்றரைலக்ஷம் ரூ மதிப்புள்ள கும்பகோணம் தாலூக்காவிலுள்ளநிலமும் வைக்கப்பட்டுள்ளது இந்த டிரஸ்டு பத்திரம் நேற்றைய தினம் திருவிடமருதூர் சப் ரிஜிஸ்டிரார் ஆபீசில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

குவலய சுதந்திர கீதம் பாடும் குயில் கூண்டிலடைபட்டது

கவர்னர் பதவி வகித்திருப்பது பற்றி கவி சரோஜினி கருத்து

நவயுகத்தை சிருஷ்டிக்க பெண்களுக்கு வீரம், தியாகம், கண்ணியம், மனே உறுதி தேவை

கான்பூர், அக். 19

"இந்தியாவிலுள்ள பெண்கள் எல்லோரும் வீரமாகவும், கண்ணியமாகவும், தியாக சிந்தனையுடனும் இருக்க வேண்டும்" என்று காலே எட்வர்ட் மன்னர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த மாதர் கூட்டத்தில் பேசுகையில் ஐக்கிய மாகாண கவர்னர் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

"கவர்னர் பதவியில் இருப்பதில் நான் சந்தோஷமடையவில்லை. காட்டில் சுதந்திரமாகத் திரிந்த பறவையை கூட்டில் அடைத்து வைத்தால் அதற்கு எத்தகைய உணர்ச்சி இருக்குமோ அதே உணர்ச்சியைத்தான் நான் அனுபவிக்கிறேன். எனது வேலை கவி பாடுவது. இந்தியாவுக்கு மாத்திரமில்லாமல் உலகம் பூராவுக்குமே சுதந்திர கீதத்தை பாடுவதே எனது வேலை.

"இந்தியா இன்னும் சுதந்திர மடையவில்லை. இந்தியாவை விட்டு வெளியேறு என்ற தீர்மானத்தின் தாத்பரியங்களை இன்னும் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இந்தியாவை சுதந்திரமடைந்த இந்தியர்கள் ஆட்சி புரியவில்லை. பரஸ்பர வீரோதமும், பகைமையுமே இப்போது நாட்டில் தாண்டவமாடுகின்றன. வகுப்புக் கலவரங்கள் நடைபெற்று வருவது மிகவும் வருத்தப்படத்தக்கது.

"பெண்கள் உலகுறைந்தவர்கள் என்ற பண்டைய நிந்தனை வேதாந்தங்களைப் பின்பற்றக் கூடாது. பெண்களின் மன உறுதி பண்டைய நாளில் அரும் பெரும் காரியங்களைச் சாதித்திருக்கிறது என்பது சரித்திரச் சான்று. ஆணுயினும் சரி, பெண்ணுயினும் சரி உண்மையாக வேலை செய்தால் அவர்கள் நிச்சயமாய் வெற்றிபெறுவார்கள்."

லேடிமவுண்ட்பேட்டன் தளராஊக்கத்துடன் ஏழை மக்களின் முன்னேற்றத்துக்கு பாடுபட்டு வருவதை ஸ்ரீமதி சரோஜினி நாயுடு பாராட்டினர். அவர் மேலும் கூறியதாவது:-

"உயர்ந்த கருத்துக்களை எளிதான முறையில் எந்த பாஷை விளக்கிக் காட்டுகிறதோ அந்த பாஷையே மெஜாரிட்டி வகுப்பாரின் பாஷையாக இருக்க வேண்டும். அத்தகைய பாஷை ஹிந்தியே".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்தான பிரதமர் பதவி

ஒரு இலங்கையருக்கு அளிக்க கோரிக்கை

கொழும்பு, அக். 20

மத்திய இந்தியாவிலுள்ள கிழக்கு சமஸ்தானங்களின் யூனியன் சர்க்காரின் பிரதம மந்திரிப் பதவி கொழும்பைச் சேர்ந்த திரு. டி. ஆர். இரத்தினம் என்பவருக்கு அளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அவருக்கு மிகஉயர்ந்தநிர்வாகப் பதவியொன்றை பாக்கிஸ்தான் சர்க்கார் அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய சிவில் சர்வீஸில் 22 வருட காலங்களாக கடமையாற்றி இப்பொழுது ஓய்வெடுத்துக் கொள்வதற்குமுன் ரஜாவில் பிரிட்டன் சென்றிருக்கிறார். இவர் 1925-ம் வருடம் இந்திய சிவில் சர்வீஸில் பதவி ஏற்று இந்தியாவிலே பல உயர்தர உத்தியோகங்களை வகித்திருக்கின்றார்.

பெண் பிரயாணியிடமிருந்த 'ஹான்ட் பேக்'

பறித்த திருடன் எறிந்துவிட்டு ஓடினான்

கொழும்பு, அக். 20

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த மெயில் ரயிலில் 1-ம் வகுப்பு வண்டியில் இருந்த ஒரு பெண்மணியிடமிருந்து ரூ. 200ம் ஒரு வைரமோதிரமும் இருந்த ஒரு கைப்பையை ஒரு திருடன் வண்டிச் சாளரம் வழியாகப் பறித்தெடுத்ததாகவும் பின்னர் அதே ரயிலில் வேறு ஒரு பெண்மணி அத்திருடனைக் கண்டு சப்தமிட்டபோதுரயில்பெட்டிக்குள் அந்தக் கைப் பையை எறிந்து விட்டு திருடன் ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

மீன்பிடி தொழிலுக்கு ஒரு விசாரணைக்கமிஷன்

மீன்பிடி ஆலோசனை சபை கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, அக். 20

மீன்பிடி இலாகா ஆலோசனைச் சபையின் கூட்டம் ஒன்று மீன்பிடி இலாகா டைரக்டர் டாக்டர் எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மீன்பிடி தொழில் சம்பந்தமான எல்லா வேலைகள் பற்றியும் விசாரித்து அறிந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு கமிஷனை நியமிக்கவேண்டுமென்று கைத்தொழில், தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி இலாகா மந்திரியைக் கேட்டுக்கொள்வதாக இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மீன்பிடி இலாகாவுக்கு ஒரு பனிக்கட்டி உற்பத்தி தொழிற்சாலை அவசியம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டவர்களின் நலன்களுக்காக இத்தொழில் அதிகமான பகுதிகளில் ஜவுளி நெசவுசாலைகள் திறக்கப்பட வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மீன் விலைபற்றியும் கூடத்தில் பேசப்பட்டது.

தேங்காய் ஏற்றுமதியாளர் தூது கோஷ்டி

கொழும்பு, அக். 20

இலங்கை தேங்காய் ஏற்றுமதியாளர் சங்கத்தூதுகோஷ்டியொன்று வர்த்தக மந்திரி திரு. ஸி. சுந்தரலிங்கத்தை வெள்ளிக்கிழமை பேட்டி கண்டது. தேங்காய் ஏற்றுமதியாளரின் குறைபாடுகளை திரு. வால்டர் எம். மெண்டிஸ் மந்திரிக்கு எடுத்துரைத்தார். இப்பொழுதுள்ள நிட்டதை மாற்றுவது அவ்வளவு சாத்தியமல்லவென்றும் இத்திட்டம் எல்லோருடைய நலன்களையும் பாதுகாப்பதாகவும் மந்திரி கூறியதாகத் தெரிகிறது. மேலும் எலலா வகையிலும் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிட்டத்தை (தேங்காய் ஏற்றுமதி சம்பந்தமாக) தயாரித்துத் தரும்படி மந்திரி திரு. மென்டிஸைக் கேட்டுள்ளார். மேலும் நிட்டத்தின் அமைப்பு எல்லாருடைய நலன்களையும் பாதுகாக்கக்கூடியதாக இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தித் தெரிவித்தார்.

பர்மாவுக்கு பெரும் பொருளாதார நெருக்கடி

மக்களுக்கு மந்திரியின் எச்சரிக்கை

ரங்கூன், அக். 19

அரசியல் சுதந்திரமடையும் நிலையில் பர்மா வந்திருக்கும் நேரத்தில் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும் அபாயம் இருப்பதாக தேசிய நிர்மாண மந்திரியும் பர்மா வர்த்தக தொழில் ஸதாபன தலைவருமான ஹென்ஸாடா உமாயா தெரிவிக்கின்றார்.

அரசியல் சுதந்திரத்துடன் பொருளாதார சுதந்திரத்தையும் பெறவதற்கு பர்மா மக்கள்- வர்த்தகர்களும், கைத்தொழிலாளரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பிரிட்டிஷ் மக்கள் காட்டியுள்ள முன்மாதிரியைப் பின்பற்றி பர்மா மக்களும் பொருளாதாரச் சுதந்திரத்தையடைய முயற்சி செய்யவேண்டுமென்றும் பர்மா வர்த்தக சபையின் வருடாந்தக் கூட்டத்தில் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (ராய்ட்டர்)

தொழிலாளர் வேலை நிறுத்தம்

பிரஞ்சு மந்திரி சபையின் நிண்டாட்டமான நிலைமை

பாரிஸ், அக். 18

பாரிஸில் வேலை நிறுத்தம் நடக்கும் பகுதிகளில் உள்ள சுமார் 60 லட்சம் மக்கள் போக்கு வரத்து வசதிகள் இன்றி கஷ்டப்படுகின்றனர்.

ரயில்வே-பஸ தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் காரணமாகவே பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கமியூஸ்ட் ஆதிக்கமுடைய தொழிலாளர் யூனியன் பொதுக் காரியதரிசி திரு. ஹெனெல், போக்கு வரத்து வேலை நிறுத்தக் கமிட்டி இங்கட்கிழமை கூடி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்குமென்று தெரிவித்ததுடன் வேலை நிறுத்தத்துக்கு பிரஞ்சு சர்க்காரே காரணமென்றும் குற்றம் சாட்டியுள்ளார். இது பொது வேலை நிறுத்தத்துக்கு ஒரு பயமுறுத்தலாக இருக்கலாமென்று விஷயமறிந்தவர்கள் கருதுகின்றனர். சர்க்கார் இப்பொழுதுள்ள நிலைமையில் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

மந்திரி சபையினரின் முக்கியஸதர்களின் கூட்டமொன்றில் இவ்வேலை நிறுத்தத்தை விரைவில் முடிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. பாரிஸில் பொது தொழிலாளர் ஸதாபனம் சம்பள உயர்வு கோருமென்று தெரிவித்துள்ளதால் வேறும் வேலை நிறுத்தங்கள் ஏற்படலாமென்று பயப்படப்படுகிறது. வேலை நிறுத்தத்தை விரைவில் முடிப்பதற்கு ரயில்வே தொழிலாளர்களின் கூட்டிய சம்பளத்தைக் கொடுக்க மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

பாரிஸ பஸ-ரயில்வே தொழிலாளர் சுமார் 15 000-க்கு அதிகமானோர் தங்களின் சம்பள உயர்ச்சிபற்றியகோரிக்கை கவனிக்கப்படும் வரை வேலை நிறுத்தத்தை தொடர்ந்து நடத்துவதென்று தீர்மானித்துள்ளனர். வேலை நிறுத்தக் கமிட்டியால் அமைக்கப்பட்ட கூட்டத்தில் இம்முறை செய்யப்பட்டதாகும். [ராய்ட்டர்]

பிழையாக கணக்குகளை எழுதியதாக வழக்கு

ஜில்லாக் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்படும்

கொழும்பு, அக் 20

தெஹிவிலையைச் சேர்ந்த திரு. டி. ஏ. சமரதிவாகரா என்னும் ரயில்வே குட்ஷெட் குமாஸதா ஒருவர் தினசரி கையிருப்புப் புத்தகத்தில் கணக்குகளைப் பிழையாக ஏமாற்றும் நோக்குடன் எழுதியதாக குற்றம் சாட்டி கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக் கெடுக்கப்பட்ட வழக்கு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. வி. டி. பண்டித குணவர்தனவினால் ஜில்லாக் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

ஏழைத் தொழிலாளர் சம்பள உயர்வு கேட்டால் எதிர்ப்பு

மந்திரிகளுக்கு மட்டும் சுகபோக சம்பளமா?

ஜவுளி முதலாளிகளுக்கும் சலுகை

சென்ற வார "ஹெலதிவ" பத்திரிகை எழுதியவற்றின் தமிழாக்கம்:-

சேனநாயக்கா அரசாங்கத்தின் மந்திரி சபை தத்தம் காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டு இரண்டு வாரம்தான் ஆகிறது. இக்குறுகிய காலத்தில் இவர்கள் செய்திருக்கும் சிலகாரியங்களைப்பற்றி நினைத்துப் பார்த்தால், எதிர்காலம் தேச மக்களுக்கு மிகவும் துரதிருஷ்டம் நிறைந்ததாய் இருக்குமென்று நன்றாய் தெரிகிறது. இவர்கள் கூடிய அன்றே முதலாவது செய்தது அசாதாரணமான சம்பளத் திட்டத்தை நிறைவேற்றி விட்டதுதான். ஆனால், ஏழைத் தொழிலாளர்கள் அன்றாட வாழ்க்கையை ஒருவாறு சமாளிப்பதற்காக சம்பள விதித்தை சிறிது அதிகரிக்குமாறு கேட்டதற்கு, அவர்களுக்கு எதிராக ஆயுதங்தாங்கி போரிட்ட இந்த மந்திரிகள், தம்முடைய சம்பளத்தை ஸ்ரீதனச் சொத்துப்போல அதிகரித்துக் கொண்டது எவ்வளவு அநியாயம்? எவ்வளவு நயவஞ்சகம்?

வர்த்தகர்களின் விடாப்பிடி

அசாதாரண முறையில் நடந்து கொண்ட புடவை வியாபாரிகளின்மேல் துணிக்கட்டுப் பாட்டதிகாரி தகுந்த நடவடிக்கையெடுக்க முயன்றதைபொதுமக்கள் ஏகோபித்து வரவேற்கிறார்கள். ஆனால் துணிக் கட்டுப்பாட்டு அதிகாரியின் உத்தரவுகளை சிறிதும் லட்சியம் செய்யாத துணி வியாபாரிகள் ராணி மாளிகை வரைக்கும் சென்றார்கள். கவர்னரும் கையை விரித்துவிட்டார்.

வர்த்தகர்களின் அட்வகேட்

பின்பு என்னவாயிற்று? வர்த்தக மந்திரி பதவிவைப்பெற்ற சுந்தரலிங்கம் அய்யாவிடம், பழைய கூட்டாளிகளான துணி வியாபாரிகள் வந்தார்கள். அவர்களின் வியாபார சம்பிரதாய முறையின்படி ஏதோவெல்லாம் முறையிட்டார்கள். மற்றப்படி சுந்தரலிங்கம் அய்யா துணி வியாபாரிகளுக்கு ஒருவகையில் கடமைப்பட்டுள்ளவர்தான். மேலும் அவர், வருடக்கணக்கான புறக்கோட்டை துணி வியாபாரிகளின் அட்வகேட்டாகஇருந்து தம் கை வரிசையைக் காட்டியிருக்கிறார். எனவே வர்த்தக மந்திரியார் செய்தது என்ன? உத்தரவை வாபஸ்பண்ணும்படி துணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு உத்தரவிட்டார். மந்திரியின் ஆணைக்குமேற்படிந்தஅதிகாரி தம் உத்தரவை ரத்துச் செய்து விட்டார். துணி வியாபாரிகள் மறுபடியும் தம்மிஷ்டம் போல் நடந்து கொண்டார். ஏழை மக்கள்தான் கஷ்டப்பட்டார்கள்.

அய்யாவின் பாபத்தில்...

ஆட்சி புரிபவர்களின் கடமை, சுகபோகங்களை அனுபவிக்கும் தனவந்தர்களைக் காப்பாற்றுவது மாத்திரமல்ல; அன்றாட உணவின்றி, உடையின்றி பரிதவிக்கும் ஏழைகளை விசேஷமாக ஆதரிப்பதே முதற்கடமையாய் இருக்க வேண்டும். எலும்பும் தோலுமாக இருக்கும் ஏழைக்கு உணவளப்போன்று துணியும் அத்தியாவசியம். ஏழைகளின் தோள்மீதேறி பார்லிமெண்டுக்குள் நுழைந்து மந்திரிப் பதவியைப் பெறறுக் கொண்ட சுந்தரலிங்கம் அய்யா செய்த பாபக் கிருத்தியங்களில் ஒரு பகுதி மந்திரி சபைக்கும் உண்டு.

எதிர்க் கட்சியின் கடமை

சுந்தரலிங்கம் அய்யாவின் நடவடிக்கைகளில் எவ்வித சுந்தரத்தையும் காணுத துணிக் கட்டுப்பாட்டதிகாரி தன் பதவியினின்றும் ராஜிநாமாச் செய்யப்போவதாக அறியப்படுகிறது. தேச மக்களுக்கு தான் பதவியிலிருக்கும்போது செய்ய வேண்டிய கடமையைச் சரியாகச் செய்ய விரும்பும் இத்தகைய சுய மதிப்புள்ள அதிகாரிகள், இன்றைய வர்த்தக மந்திரி போன்றோரின் உத்தரவுக்கு கீழ்ப்படியாதது வரவேற்கத் தக்கதாகும். எப்படியாயினும் சுந்தரலிங்கம் அய்யா செய்ததைப்போன்ற நடவடிக்கைகளில் எதிர்க் கட்சியினர் மிகுந்த எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். எனவே சுந்தரலிங்கம் அய்யாவின் இந்த நடவடிக்கை பார்லிமெண்டில் எதிர்க்கட்சியினரின் சர்ச்சைக்கு இலக்காவது நிச்சயம். அச் சமயம் அவர் என்ன பந்தம் பிடிப்பார் என்று எதிர்பார்ப்போம். இந்நாட்டிற்கு துணிமணிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்ய

கடவுள்களுக்கு மதுவிலக்கு இல்லை

கள்ளு, சாராயம் படைக்க சர்க்கார் அனுமதி

கள்ளிக்கோட்டை, அக். 19

சென்னை சர்க்கார் மலையாள ஜில்லாவில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல் செய்ததால் மலையாளத்திலுள்ள ஜனங்கள் மதுவிலக்கு அமுலுக்கு வரும் தினத்திற்கு முன்தினம் கோயில்களில் சாமிகளுக்கு நிறையக் கள்ளு சாராயம் படைத்து சாமி கும்பிட்டனர். ஆனால் இப்பொழுது கள்ளு சாராயம் படைக்கப்படும் சாமிகளுக்கு குறிப்பிட்ட அளவில் அவைகளைப் படைப்பதற்கு சென்னை சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

வட மலையாளத்திலுள்ள பரினி கடவுள் கோயிலுக்கு தினம் ஒருபோத்தல் சாராயமும் ஒரு போத்தல் தென்னங் கள்ளும் படைக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

கவர்னர் மூலமாகவாவது அனுமதி பெற இந்திய வர்த்தகர்கள் பஞ்சு படாத பாடுபட்டார்கள். கவர்னர்கூட செய்ய பின்வாங்கிய இந்த பொதுக்காரியம் சுந்தரலிங்கம் அய்யா செய்து விட்டது பெரிய அநியாயமாகும். இந்த அநியாயத்திற்கு மந்திரி சபை காரணம் கூறியாக வேண்டும்.

வாழ்த்துச் செய்தி

இங்கிலாந்து பார்லிமெண்டு தலைவரிடமிருந்து கிடைத்த வாழ்த்துச் செய்தியை இலங்கைப் பார்லிமெண்டு தலைவர் திரு. மொலமுரே ஆரம்ப தினமான சென்ற 14ம் தேதி, பார்லிமெண்டுக் கூட்டத்தில் வாசிதத்துக் காட்டினார். அந்த வாழ்த்துச் செய்தியில் உள்ள சில வசனங்களை இத்தேச மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

கவனித்துப் பாருங்கள்

வாழ்த்துச் செய்தியில் 'தங்களுடைய அதிகாரிகளும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கு மிடையே உள்ள சம்பந்தத்தைப் போன்று, எங்கள் ஏகாதிபத்தியத்திலுள்ள வேறுஎந்ததேசத்துப் பார்லிமெண்டிடமும் இல்லை யென்று சொல்லவேண்டியிருக்கிறது. எங்களிடையே இருக்கும் இந்த சம்பந்தமானது எதிர் காலத்தில் இன்னும் பன்மடங்கு விரிவடையுமென்று எண்ணுகிறோம்.'

"சுதந்திரம்" எங்கே

ஏகாதிபத்திய சம்பந்தம் வர வர வலுவடைகிற மாதிரியும், மேலும வலுவடையச் செய்வதற்கு எண்ணுகிற மாதிரியும், இதற்கு சிலர் தந்திரமாக உதவி செய்கிற மாதிரியையும், தேசத்தின் மீது ஆர்வமுள்ள பொது மக்கள் மிகவும் எச்சரிக்கையாய்க்கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.

மேற்படி வசனங்களடங்கிய செய்தியில் எந்த வொரு இடத்திலும் சுதந்திரம் என்ற சொல்லு பட்டிருக்கக்கூட வில்லை.

பாலஸ்தீன எல்லையில் அராபிய துருப்புகள்

230 000 பேர்கள் போருக்கு ஆயத்தம்

ஈராக் பிரதமர் பிரதம தளபதியாக நியமனம்

ஜெருசலேம், அக். 18

பாலஸ்தீனத்தின் வடக்கு எல்லையில் சிரியாவை அடுத்துள்ள பிரதேசத்தில் இன்று அராபியத் துருப்புகள் யுத்த சன்னத்தமாக வந்து குவிகின்றன பாலஸ்தீனப் பிரிவினையை எதிர்த்து அராபிய லீக் செய்துள்ள முடிவின் பயனாக இந்த ராணுவ முன்தீபு நடைபெறுகிறது. அராபிய துருப்புகளின் போர்க்கோலத்தை முன்னிட்டு டிரான்ஸ ஜோர்டானில் பிரிட்டிஷாரால் பயிற்சியளிக்கப்பட்ட துருப்புகள் டிரான்ஸ் ஜோர்டான் எல்லைப்புறத்தைப் பாதுகாத்து வருகின்றன.

இதற்கிடையே அகில அராபிய துருப்புகளின் பிரதம தளபதி நியமிக்கப்பட்டுவிட்டதாக ஜெருசலேமிலிருந்து வெளியாகும் பாலஸ்தீன அராபிய பத்திரிகையான 'அல்விஹ்தா' தெரிவிக்கிறது. ஈராக்கின்] பிரதம மந்திரியும் ராணுவத் தலைவருமான தாஹா ஹாஷிமி பாஷாவே பிரதம தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அகில அராபிய நாடுகளையும் சேர்ந்த 230,000 அராபிய துருப்புகள் போருக்குத் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹென்றி வாலஸ

அமெரிக்காவின் மாஜி உதவித் தலைவரான ஹென்றி வாலஸ பாலஸதீனத்திற்கு விஜயம் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார்.

பாலஸதீனத்திலுள்ள 8-வது பிரிட்டிஷ ராணுவத்தைச் சேர்ந்த இரண்டு பட்டாளங்கள் சில தினங்களுக்கு முன் வெளியேறிவிட்டன. மூன்றுவதான பாரசூட் பட்டாளம் பின்னுவிலிருந்து எக்ரேக்கு வந்திருக்கிறது. டிரான்ஸ ஜோர்டான் எல்லையிலிருந்த பிரிட்டிஷ்படையும் டிரான்ஸ்ஜோர்டான் தலைநகருக்கு கிழக்கே ஸெர்க்காவென்னும் தனது தலைமைக் காரியாலயத்திலிருந்து பின்னுவுக்கு வந்திருக்கிறது.

ஜெருசலேமில் இன்றிரவு வெடி குண்டுகள் வெடித்தன. பல இடங்களில் தொங்கவிடப்பட்ட விளம்பரங்களின் மூலம் இக் குண்டுகள் வெடித்தன 6000 புரட்சித் துருப்புகளடங்கிய யூதப் புரட்சி ஸதாபனத்தார் இப்பொழுது பாலஸ்தீன பிரிவினையை எதிர்த்து இப்புதியகுண்டுப்பிரசாரத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

பாரசீக நிலைமை

பாரசீக பிரதம மந்திரி கலாம் ரஷிய-பாரசீக ஆயில் ஒப்பந்தம் சம்பந்தமாக நாளை பாரசீக பார்லிமெண்டில் தனது அறிக்கையை சமர்ப்பிப்பார்.

எகிப்தில் காலரா நிலைமை

எகிப்தில் தினந்தோறும் காலரா நோயால் மணிக்கு 15 பேர்கள்மடிகின்றனர்.

இந்தியாவின் உதவி

எகிப்தில் பரவிவரும் காலரா நோயைத் தடுக்க இந்திய சர்க்கார் எகிப்திய சர்க்காருக்கு 30 லட்சம் காலரா மருந்து ட்யூப்கள் அனுப்ப முடிவுசெய்திருக்கின்றனர். அதில் 5 லட்சம் ட்யூப்கள் விமானமூலம் அனுப்பப்பட்டுவிட்டன. இம்மருந்து பம்பாயிலுள்ள ஹாப்கின் மருந்து உற்பத்திசாலையில் தயாரிக்கப்பட்டது. [ராய்ட்டர்]

தூரகிழக்கில் கமியூனிஸடுகள் நடவடிக்கைகள்

"டெய்லி மிரர்" அரசியல் நிருபர் கூற்று

லண்டன், அக். 18

தூரகிழக்குப் பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பிய இடதுசாரிக் கட்சியின் பத்திரிகையான "டெய்லி மிரர்" என்னும் பத்திரிகையின் அரசியல் நிருபர் கஸஸானோவா என்பவர் ஆசியாவில் கமியூனிஸடுகள் ஆதிக்கம் பெற கையாளும் முறைகள்பற்றி தாம் அறிந்தவற்றை எழுதியுள்ளார்.

தூரகிழக்கில் கஷ்டங்கள் இருந்தால் அது கமியூனிஸடுகளுக்கு இடங்கொடுப்பதாக இருக்கிறதென்றும் கமியூனிஸடுகளின் போக்குகள்பற்றியும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

(ராய்ட்டர்)

பர்மா மந்திரிகளின் திருப்தி

லண்டனில் உள்ள தூதுகோஷ்டி செய்துள்ள வேலைகள்

ரங்கூன், அக். 19

லண்டனில் பர்மா பிரதமர் தக்கின்நு தலைமையில்சென்ற தூதுக்கோஷ்டி சாதித்துள்ள விஷயங்கள் தங்களுக்கு அளவு கடந்த திருப்தியை அளிப்பதாக பர்மா மந்திரி சபையினர் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டப்பட்ட ஆங்கிலோ-பர்மா நேசஉடன்படிக்கையைப்பற்றி எதுவும் கூறமறுத்தவிட்டனர். (ராய்ட்டர்)

டச்சு சர்க்காருடன் இந்தோனேஷியர் ஒத்துழைப்பு

பாண்டங, அக் 18

டச்சு ஆதிக்கத்திலுள்ள மேற்கு ஜாவாப் பகுதியில் சமயம், அரசியல், வர்த்தகம் ஆகிய பகுதிகளைக் குறிக்கும் 50 பிரதிநிதிகள் (இந்தோ னேஷியர்) அடங்கிய ஒரு மகாநாட்டில் தேச புனருத்தாரணத்தில் நெதர்லாந்து சர்க்காருடன் ஒத்துழைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜனநாயக கொள்கைப்படி மேற்கு ஜாவாவில் எல்லா கட்சிகளும் கொண்ட ஒரு சுதந்திர ஆரம்பசர்க்காரை அமைப்பதற்கு எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஒரு பொது மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அமைக்கும்படியும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது' மகாநாடு ஒழுங்குகளை நிறைவேற்ற ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

ஜப்பானிய அட்மிரல் மரண தண்டனை

பொன்டியாரக், அக். 19

டச்சு மேற்கு போர்னியோவைச் சேர்ந்த பொன்டியாரக் என்னுமிடத்தில் நேற்று ஜப்பானிய யுத்தக் குற்றவாளியான வைஸ-அட்மிரல் கமாடா மிஷியாகியை சுட்டுக் கொலைசெய்ததாக நெதர்லந்து செய்தி ஸ்தாபனம் அறிவிக்கின்றது. [ராய்ட்டர்]

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கொண்ட கடதாசி

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முற்றுங்கள் விலை ரூ. 3-50

இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,

85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது,

பிரதர்ஸ் (மரைக்கார் கடை)

பூக்குளம் பார்க்கிற்கு எதிரே

திருச்சிராப்பள்ளி.

கிரவுன் தியேட்டர் கிங்ஸ்லி ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்

சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 5-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரூல் மெயில் புகழ் பாட்லிங்மணி

புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

கட்டிடத்துக்கு தேவையான சிமந்தும் மற்றச் சாமான்கள் எல்லாம்

எங்களிடம் குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி,

No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,

புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 2029

டெலிகிராம்: 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,

யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை.

புதிய மதுரமான முந்திரிகைப் பழங்களும் ஆப்பிள்களும் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரோச் அன் கோ.,

மலிபான் தெரு,

போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸில்.....

வேலை நிறுத்தப் புயல் அடிப்பு

ஆயுதபாணிகளின் காவல்

தேர்தலில் டி கால்-கமியூனிஸ்ட் போட்டி

பாரிஸ, அக். 19

பாரிஸ் நகரை ஸ்தம்பிக்கச் செய்திருக்கும் பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் இன்று ஆறுவது நாளை அடைந்தது. பஸ 'காலி'களில் ஆயுதந்தரித்த காவலர்கள் ரோந்து சுற்றி வருகிறார்கள்.

போக்கு வரவுக் கமிஷனின் அங்கத்தினர்கள் பிரதமர்ராமடி. ரால்நடத்தப்பட்டஒருமகாநாட்டில் இன்று கலந்துகொண்டனர். சர்க்காரின் நிட்டம் ஒன்றை வேலை நிறுத்தக்காரரின் தலைவர்களுக்கு இவர்கள் சமர்ப்பிப்பார்களென்று அறியப்படுகிறது.

வேலை நிறுத்தத்தின் காரணமாகப் போக்குவரவு சீர்குலைந் திருந்தபோதும் பிரெஞ்சு நகர முனிசிப்பல் தேர் தல்களில் அதிக உற்சாகம் காணப்பட்டது. யுத்தத்தின் பின் இது வரை ஆறு தேர்தல்கள் இங்கு நடைபெற்றிருக்கிறது. ஆயின அவை எல்லாவற்றிலும்பார்க்க இத்தடவை அதிக வோட்டர்கள் வாக்களித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் டி காலினால் சமீபத்தில் ஓர் கமியூனிஸ்ட் எதிர்ப்பு பிரெஞ்சு மக்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்ட தல்லவா? அதற்கும் பிரெஞ்சு கமியூனிஸ்டுகளுக்கும் பலத்த போட்டியாய் இருக்கிறது.

டி கால் கட்சியின் கொள்கை,சட்டரீதியான சீர்திருத்தம் ரஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் சண்டை யேற்பட்டால் அமெரிக்கா பக்கம் சேர்ந்து நிற்றல் முதலியவையாகும்.

டெல்கிரேடில் ஒன்பது தேச கமியூனிஸ்ட் மகாநாட்டின் பின் நடக்கும் முதல் தேர்தல் இதுவாகும். இதில் பிரெஞ்சு கமியூனிஸ்ட் கட்சியும் அங்கம் வகிக்கிறது.

கமியூனிஸ்டுகள் அதிக வெற்றிபெறும் பட்சத்தில் அரசாங்கத்தில் தம்மைச் சேர்க்கும்படி அதிகரித்த கிளர்ச்சி செய்வார்கள். பிரான்ஸிலே பெரிய அரசியல் கட்சி கமியூனிஸ்ட் கட்சி அவர்களுக்கு சென்ற நவம்பர் தேர்தலில் 21-9 வீதம் வோட்டுக் கிடைத்தது. இருந்தபோதிலும் இவ்வருடம் மே மாதம் தொடக்கம் அவர்கள் அரசாங்கத்திலிருந்து ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறார்கள்.

டி கால் கட்சிக்கு வெற்றி யேற்பட்டால் பிரெஞ்சு அரசியல் வானில் சில முக்கிய மாற்றங்கள் நிகழுமென நம்பப்படுகிறது. [ராய்ட்டர்]

இந்தியாவிலுள்ள ஐரோப்பியர் தொகை

புதுடில்லி, அக். 17

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனருக்காக சிலமாதங்களுக்கு முன் எடுக்கப்பட்ட ஜன சங்கியையில் 1947 மத்தியில் இந்தியா, பாக்கிஸ்தான், இந்திய சமஸ்தானங்கள் ஆகியவைகளில் சுமார் 34,000 ஐரோப்பிய சிவிலியன்கள் (ஆண் பெண் குழந்தைகள் உட்பட) இருப்பதாகத் தெரிந்தது.

பம்பாயில் ராணுவப் பயிற்சி

பிரதமர் தகவல்

பூனா, அக். 17

பம்பாய் மாகாணத்தில் ராணுவப் பயிற்சி அளிக்கும் திட்டம் சர்க்கார் யோசனையிலிருந்து வருவதாக பிரதமர் ஸ்ரீ. பி. ஜி கெர் இன்று மேல் சபையில் கேள்வி நேரத்தின்போது கூறினர். கல்வி ஸ்தாபனங்களிலும், இதர பொது ஸ்தாபனங்களிலும் இளைஞருக்கு சுடுவதில் பயிற்சியளிக்கும் விஷயமும் யோசனையிலிருக்கிறதென்றார். இப்பொழுது பம்பாய் மாகாணத்தில் 9 ஸ்தாபனங்களுக்கு குறி வைத்துச் சுடும் பயிற்சியளிக்க ஆயுத லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பார்லிமெண்டு இன்று கூடுகிறது

நெருக்கடியை சமாளிக்க தொழிற் கட்சி அரசாங்கத்தின் பிரயத்தனம்

டோரிகள் எதிர்ப்புக்கஞ்சாமல் சோஷியலிஸ்ட் கொள்கையை அமுல்செய்ய யுத்த மந்திரி எச்சரிக்கிறார்

கமியூனிஸ்ட்காரியாலயத்தில்வெடிகுண்டு வீச்சு

முனிசிபல் தேர்தலில் தலைதூக்க சர்ச்சில் கனவு

லண்டன், அக். 19

செவ்வாய்க்கிழமை மன்னர் பார்லிமெண்டு கூட்டத்தை ஆரம்பித்து வைப்பார். அப்பொழுது காமன்ஸ சபை அங்கத்தினர்கள் 640 பேர்களும் லார்டு சபை அங்கத்தினர்கள் 600 பேர்களும் கூடியிருப்பார்கள். நாட்டைக் கவிழ்க்கும் நிலையிலுள்ள பொருளாதார நெருக்கடியை தொழிற் கட்சி அரசாங்கம் எவ்வாறு சமாளித்துவருகிறதென்பதைப் பற்றி வகை சொல்லவேண்டும். இறக்குமதி தொகையைவிட ஏற்றுமதித் தொகை 60 கோடி பவுண் குறைவாக இருப்பதை சரிக்கட்ட எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கம் பார்லிமெண்டுக்குப்பதில் சொல்லவேண்டும்.

பார்லிமெண்டில் முதலாவது பர்மா சுதந்திர மசோதா தாமதமாக கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப் படும்.

செவ்வாய்க்கிழமை மன்னர் பேசியதும் பின்னர் பிரதம மந்திரி அட்லி, எதிர்க்கட்சி தலைவர் சர்ச்சில், பொருளாதார மந்திரி கிரிப்ஸ முதலியவர்கள்பேசுவார்கள்; சிலவாரங்களில் பொக்கிஷ மந்திரி வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பார். காஸ கைத்தொழில் தேசிய மயமாக்கப்படும் என்றுதெரிகிறது. இரும்புக் கைத்தொழில் தேசிய மயமாக்குவது பற்றி அடுத்த கூட்டத்தில் விவாதிக்கப்படும். ஜனனமுதல் மரணம்வரை ஒவ்வொருவருக்கும் இன்ஷூரன்ஸ் ஏற்படுத்தும் திட்டம் கொண்டுவரப்படும். மரண தண்டனையை ஒழிப்பது சம்பந்தமாகவும் சட்டம் கொண்டு வரப்படும்.

ஷின்வெல் எச்சரிக்கை

தொழிற்கட்சி நிர்வாக சபை தலைவரும் புதிதாக யுத்தமந்திரியானவருமான திரு. ஷின்வெல் இன்று பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-பிரிட்டன் இப்பொழுதுள்ள கஷ்ட நிலைச்சமாளிக்க வேண்டுமானால் சோஷியலிஸட் கொள்கைகளை அமுல் செய்யவேண்டும். டோரிகளின் எதிர்ப்பிற்காக நாம் நமது கொள்கைகளை அமுல்செய்ய பின் வாங்கலாகாது.

மற்றொரு யுத்தம் நேரிடாமல் இனி உலகில் எந்தநாடும் பிழைத்திருக்க முடியாது. இந்நாட்டு மக்கள் போரை விரும்பவில்லை. ஆதலால் யுத்தத்தில் கொண்டுவிடும் பிற்போக்கு நடவடிக்கைகளைக் கைவிட்டு முற்போக்கு கொள்கைகளைப் பின்பற்றவேண்டும்.

சமாளிப்போம்

பிரிட்டிஷ் உணவு மந்திரி திரு. ஸ்டிராச்சி, டண்டி நகரில் பேசியபோது கூடிய சீக்கிரம் பிரிட்டன் நெருக்கடியை சமாளித்துவிடுமென்று தெரிவித்தார்

கமியூனிஸ்ட் காரியாலயம் தாக்கப்பட்டது

பிரிஸ்டல் நகரிலுள்ள கமியூனிஸ்ட் கட்சி காரியாலயம் இன்று அதிகாலையில் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. ஜன்னல்கள்நொறுங்கின.வெடிசப்தம் கேட்டு அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் செய்துகொண்டிருந்த ஜனங்கள் திடுக்கிட்டெழுந்தனர். வெடிகுண்டுகளை வீசியவர்கள் தப்பி ஓடிவிட்டனர். இதுபற்றி பிரிஸ்டல் கமியூனிஸ்ட் காரியதரிசி பின்வருமாறு தெரிவித்தார்:- சமீபமாக சில வாரங்களில் எங்கள் காரியாலயம் 7-வது தடவையாகத் தாக்கப்பட்டது. காவலாளிகளை வைத்திருக்க உத்தேசித்திருந்தோம். நல்லவேளையாக அப்படிச் செய்யவில்லை. காவலாளிகளிருந்திருந்தால் அவர்கள் விபத்துக்குள்ளாகியிருப்பார்கள். இங்குள்ள பாஸிஸ்ட கட்சிக்காரர்கள்தான் இச்சம்பவத்திற்குக் காரணம்.

முனிசிபல் தேர்தல்கள்

பிரிட்டிஷ் முனிசிபல் தேர்தல்கள் நவம்பர் முதல்தேதிஆரம்பமாகின்றன. இரண்டு வருடம் ஓய்ந்திருந்த திரு சர்ச்சில் தனது கட்சி பலத்தை திரட்ட இப்பொழுது குதித்தெழுந்து ஊக்கமாக வேலை செய்கிறார். தொழிற் கட்சிக்கும் கமியூனிஸ்டு கட்சிக்குமிடையே போட்டி மும்முரமாக இருக்கும்.

உள்நாட்டு யுத்தக் கப்பல்கள் குறைவு

பிரிட்டன் பாதுகாப்புக் குள்ள உள்நாட்டு யுத்தக் கப்பல்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது 5 கப்பல்கள்தான் இனி இருக்கும். மற்றக் கப்பல் வீரர்கள் கலைக்கப்பட்டு கைத் தொழில்களில் ஈடுபடுவார்கள்.

மத்தியதரைக் கடல் விமானத் தளபதி

ஸர் வில்லியம் டிச்சன் மத்தியதரைக் கடல், மத்திய கிழக்கு நாடுகள் பகுதிக்கு விமானத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். பெப்ரவரி மாதம் வேலையை ஒப்புக்கொள்வார்.

அமெரிக்க ரப்பர் கொள்கை கண்டனம்

அமெரிக்கர்கள் செயற்கை ரப்பர் உற்பத்திக் கொள்கை அனுஷ்டிப்பதை 'சண்டே எக்ஸ்பிரஸ' பத்திரிகை கண்டித்து எழுதியிருக்கிறது. முன்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில் உற்பத்தியாகும் ரப்பர் அமெரிக்காவுக்கு ஏற்றுமதிசெய்யப் பட்டதால் அதிகடாலர் கிடைத்ததென்றும் உலக பொருளாதார மீட்சியை முன்னிட்டு அமெரிக்கா செயற்கை ரப்பர் உற்பத்தியைக் கைவிட்டு இயற்கை ரப்பரை இறக்குமதி செய்யவேண்டுமென்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

இரவு ரயில்களுக்கு "சேர்ச் லைட்"

திருட்டுப் போவதை தடுக்க ஏற்பாடு

கொழும்பு, அக. 21

இரவுப் பிரயாணம் செய்யும் ரயில்களில் வரவர்த திருடர்கள் தொல்லை அதிகமாகிவருவதைத் தடுப்பதற்கு ரயில்வே அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க ஆலோசித்துள்ளனர். ரயில் எஞ்ஜினின் பின்பகுதியின் இரு கரையிலும் அதிக சக்தி வாய்ந்த இரு மின்சார விளக்குகளை வைத்து கார்டுபெட்டி வரையும் அவ்வெளிச்சம் தெரியும்படி ஒழுங்குகளைச் செய்ய சிபார்சு செய்யப்பட்ட தீர்மானம் பற்றி அதிகாரிகள் ஆலோசித்துள்ளனர் என்று அறியப்படுகிறது. இதன்மூலம் ரயிலின் இரு கரையிலும் வெளிச்சம் இருப்பதோடு ரயில்களில் திருட முயற்சிப்பவர்களுக்கும் திருடுவது சாத்தியமற்ற விஷயமாகிவிடும். சக்தி அதிகம் கொண்ட மின்சார வெளிச்சம் ரயில்வே கார்டுகளுக்கு ஓரளவு கஷ்டத்தைக் கொடுக்குமெனினும் இத்திட்டத்தின்படி திருட்டுகளை ஒழிக்கலாமென அதிகாரிகள் தீர்மானிக்கின்றனர்.

தென் மாகாண ரஸ்தாக்கள் திருத்தியமைக்கப்படுகின்றன

தெ மா. எஸ்டேட் முதலாளிகள் சங்கக் கூட்டம்

காலி, அக், 19

தென் மாகாண எஸ்டேட் முதலாளிகள் சங்கக்கூட்டமொன்று நீயூ ஓரியண்டல் ஹோட்டலில் நேற்று திரு. சைமன் அபயவிக்ரமா தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் சார்பில் பிரதம மந்திரிக்கு தலைவர் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

கூட்டத்தில் திரு. டி. பி. டி. எஸ். முனசிங்கா (சுப்ரன் டெண்டிங எஞ்சினீயர்) காலி, மாத்தறை ரஸதாக்கள் யுத்த காலத்தில் சேதமடைந்திருந்தன வென்றும் அவைகள் அதிகமாக திருத்தியமைக்கப்பட்டு விட்டனவென்றும் இவ்வருடம் மூடியுமுன் அவைகளை முற்றுக யுத்த முற்கால நிலைமைக்கு திருத்தியமைக்க முடியுமென்றும அதற்குப் போதிய நிதியும் மற்றும் பொருள்களும் கிடைக்கத்தக்கதாகச் செய்ய வேண்டுமென்றும் கூறினர். தலைவர் திரு முனசிங்காவைச் சபையின் சார்பில் பாராட்டினர். இதன்பின்னர் அவர்கள் சங்க விஷயமாக பல சம்பவங்கள் சபையில் விவாதிக்கப்பட்டன.

ஸ்தல ஸ்தாபன உத்தியோகஸ்தர் நியமனம்

காலி, அக். 20

காலி முனிசிபல் சபைக்கு ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஒருவரை ஸ்தல ஸ்தாபன சர்க்கார் சர்வீஸ் கமிஷன் நியமித்திருந்தது. இவருடைய வருடச் சம்பளம் முனிசிபல் சபையின் சம்பள அளவை விட அதிகமாக இருந்ததால் முனிசிபல் சபை அவருக்கு வேலை கொடுக்க மறுத்துவிட்டது. கமிஷனும் இந்த உத்தியோகஸ்தரை வேறு இடத்துக்குமாற்றுதுவிட்டுவிட்டது. இதனால் முனிசிபல் சபை கடந்த கூட்டத்தில் இந்த உத்தியோஸ்தரின் வேலையை அக்டோபர் 30-ம்தேதியுடன் நிறுத்துவதென்றும் அவருடைய சம்பளத்தை அதுவரை கொடுப்பதென்றும் இக்கால எல்லையுடன் ரெவினியூ இன்ஸ்பெக்டர் பதவியையே இல்லாமல் செய்வதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

புதிதாக நியமிக்கப்பட்ட திரு. ரொட்ரிக்கோவுக்கு முன் நிர்ணயித்தபடி ஒரு வேலையும் கொடுக்கப்படாதென்றும் இந்த கமிஷனுக்கு பாடம் படிப்பிக்க இம்முறையேயகையாளவேண்டுமெனறும் ஒரு அங்கத்தவர் கூறினர்.

இப்பொழுது ரெவினியூ இன்ஸ்பெக்டர் திரு. எம். ஸ். டபிள்யூ. ரொட்ரிகோ சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனுவைத் தாக்கல் செய்துளளார். அதில் 1-7-47 முதல தமது சம்பளம், பிரயாணச் செலவுகள் மற்றும் அலவன்ஸ்கள், வழக்குச் செலவுகள் ஆயினவற்றை காலி முனிசிபல் சபையும் ஸ்தல ஸ்தாபனகமிஷனும்கொடுக்குபடி தீர்ப்பளிக்கப்படவேண்டுமென்று தெரிவித்துள்ளார் இவ்விஷயம் பற்றி நேற்று முன்தினம நடந்த முனிசிபல் சபைக் கூடத்தில் ஆலோசிக்கப்பட்டது.

ஸ்தலஸ்தாபன சர்க்கார் திரு. ரொட்ரிகோவை ஆதரிப்பதாகவும் இந்த வழக்கு சம்பந்தமாக தாமும் முனிசிபல் கமிஷனரும் கொழும்புக்குச் சென்று சட்ட அறிஞர்களுடன் ஆலோசனை செய்துள்ளதாகவும மேயர் திரு. டபிள்யு. டி. விஜயகுலசூரியா தெரிவித்தார்.

இளைஞன் தற்கொலை

நீர்கொழும்பு, அக். 20.

நீர்கொழும்பு குடன்விலா என்னுமிடத்தைச் சேர்ந்த வில்லி என்னும் இளைஞன் ஒரு சுக்கஸுக்குள் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு முன்பும் ஒரு முறை இவ் வீளைஞன் தற்கொலைபுரிய முயற்சித்ததாகவும் அதனால் அ கொடை மனநோய் ஆஸ்பத்திரியில் சிறிது காலம் சிகிச்சையளிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. வெள்ளிக்கிழமை இரவு சாப்பாட்டின் பின் இளைஞன் காணமல் போய்விட்டதாக போலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. தற்கொலையால் மரணமென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

தமிழ் சாசியத்தை நொருக்க சில சிங்களவர் சதி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

த்துவந்ததமிழரும் சிங்களவரும் இன்று அப்பிரசாரகர் சையாயுதமாய் விளங்குவதை வடமாகாணம் தவிர மற்றெல்லா மாகாணங்களிலும் காணலாம். மேல் மாகாணம் முதலாம் இடங்களிலுள்ள தமிழரே வடமாகாணத்திலிருக்கும் தம் உறவினர்க்குத் துற்புத்தி போதிக்க முயன்று விட்டனரென்ருல் அவர்கள் பிரசாரத்தினால் சிங்கள மகாஜனங்களின் மனப் எத்துணை தூரம் மாறுதலடைந் திருக்க வேண்டுமென்பதை அறிவுடையோர் உணர்வது எளிது! தன் தமயனுக்கு விரோதமாய் சத்துராதிக்கு வழிகாட்டியகோடரி காம்பினைய விபீவணர்களைதமிழரிடைஉண்டுபண்ணிவிட்டது சில சிங்களவர் பிரசாரவேலையின் பெறுபேறென்பதைத் தமிழ் மகாஜனங்களோடு தலைவரும் உணரவேண்டும். தன் சகோதரனுடைய விபீஷணனின் துர்ப்போதனைக்கிணங்காது தமயனுக்காகத் தன்னுயிரைத் தியாகம்செய்த கும்பகர்ணனின் நற்குணத்தையாவும்பின்பற்றவேண்டும். பச்சைத்

சீனாவில் அமெரிக்க துருப்புகள்

சர்க்கார் அங்கீகாரம் அளித்தது

நாங்கிங், அக். 17

சீனாவில் அமெரிக்க துருப்புகள் இருக்க சீன சர்க்கார் அங்கீகாரம் அளித்துவிட்டது. இது சம்பந்தமாக பரஸ்பர ஒப்பந்தம் இறப்பதாக சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

தண்ணீரிலே பலகாரஞ்சுட எண்ணிக்கொண்டிருக்கும் தமிழ்த் தலைவர் இத்துணை தர்ம சங்கடத்துக்கிடையில் தலைநிமிர்ந்து நிற்பதெப்படி?'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்றபடி தலைவர் பொன்னம்பலம் தன் கைகெட்டியதைக்கொண்டே சிங்களவரிடும் முட்டுக்கட்டைகளையெல்லாம் தவிடு பொடியாக்கி வருகிறார். இவைகளைப் பொதுஜனங்கள் சற்றே நிதான புத்தியுடன் சிந்தித்துப் பார்க்கக்கடவர். சிங்களவர் நடத்திய பத்திரிகைகளின் பிரசாரவேலையின்பெறுபேற்றைஉணர்ந்து தமிழ்த் தலைவர் இனிமேலாவது அது தமிழரை அலங்கோலம் செய்தகாட்சியைக்கவனித்துப்பார்ப்பாரா? பச்சைத்தண்ணீரில் பணிகாரம்கரைந்துபோனதைக் கண்டபின்னுமா புத்தி வரவில்லை? மேலும் காலந்தாழ்த்தாது சிங்களவரை முன்மாதிரியாக வைத்துத் தமிழரும் பிரசார வேலையில் ஈடுபடவேண்டியது மிகமிகு அவசியம். இதைப்பற்றி முன்பொருகால் தமிழ்த் தலைவருக்கு யான் கூறியதை இவ்வேளை ஞாபகப்படுத்துகிறேன்.

அஃதங்ஙனமாக இக் கட்டுரைகாரர் தன் கட்டுரையின் முடிவிலே சிறுபான்மையினராகிய தமிழரைப் பாதுகாக்க பெரும் பான்மையினரான சிங்களவர் சர்வாதிகார அரசியலில் போதிய வசதியளிக்கப்பட்டிருப்பதாகவும், அது போதாது, இது போதாது என்று சிறுபான்மையினர் ஏதாவது பேசினால் அது சர்வாதிகாரம் என்றெடுக்கப்படுமென்றும், அஃதே தமிழ்நாட்டின் அழிவுக்கு ஏதுவாகுமென்றும் கனம் பிரான்சிஸ் கூரே கூறியிருக்கிறார் இவர் பேசுவதுசர்வாதிகாரமா-அல்லது நியாயவாதமா? ஹிட்லர் பேசிய சர்வாதிகாரத்தை நியாய வாதமென்றே அவர் சாதித்தார். முசோலினி பேசிய சர்வாதிகாரத்தை முசோலினி நியாய வாதமென்றே சாதித்தார். இந்தச் சிங்களப் பெரியார் பேசும் சர்வாதிகாரத்தை நியாயவாதமென்றே அவர் எண்ணியிருக்கலாம். சர்வாதிகாரத்துக்கு முடிவு வரும்போது கனம் பிரான்சிஸ கூரேயும் உண்மையை உணரமுடியாதுபோனலும் நடப்பைக் கொண்டறியலாம்தானே!

உலக சீர்கேட்டுக்கு காரணம்

திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி கருத்து

9 வருடங்களுக்குப் பின் இந்தியா திரும்பிய "லோக குரு"

சென்னை, அக் 19

பிரம்மஞான சங்க ஸ்தாபகரும் ஹோம் ரூல் இயக்கத்தை நடத்தியவரும் இந்தியாவின் உதாரணத்திற்கு அரிய சேவை செய்தவருமான காலஞ்சென்ற பிரிட்டிஷ் மங்கை பெசன்ட் அம்மையாரால் "லோக குரு" என்று பிரகடனம் அறிஞரான திரு. ஜே. கிருஷ்ண மூர்த்தி இந்தியா திரும்பி வந்திருக்கிறார். இவர் இந்திய நட்சத்திர சங்கத் தலைவராக உலகில் சுற்றுப் பிரயாணம் செய்தவர். இவர் சென்ற 9 வருடகாலமாக அமெரிக்காவில் கலிபோர்னியாவிலுள்ள ஓஜெய் என்னுமிடத்தில் வசித்து வந்தார். பத்து தினங்களுக்கு முன் இந்தியா திரும்பி வந்து இப்பொழுது சென்னையிலிருக்கிறார். இரண்டு மாத காலம் அவர் இங்கு தங்கியிருப்பார். அக்டோபர் 28-ம்தேதி முதல் நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் ரோடு 14-ம் நம்பர் கட்டிடத்தில் தொடர்ச்சியாகப் பிரசங்கங்கள் செய்வார். இவர் பெரியதோர் சிந்தனையாளர். இவரைப் பத்திரிகா நிருபர் பேட்டி கண்டபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இப்பொழுது உலகிற்குத் தேவையானவை நவயுகத்தை சிருஷ்டிக்கும் புரட்சிகரமான சிந்தனைகளும் செயல்களுமேயாகும். பிறருடைய லட்சியங்களையும், கொள்கைகளையும், அவை தற்காலத்தியவையாக இருந்தாலும் சரி, பழங்காலத்தியவைகளாக இருந்தாலும் சரி - 'காப்பி' அடிக்கலாகாது. மனிதன் தேசீயவாதம், வகுப்புவாதம் என்ற கொள்கைகளை மறந்து அவைகளை அடியோடு ஒழிக்க வேண்டும். இப்பொழுது உலகம் சீர்கெட்டுப்போயிருப்பதற்கு இக் கொள்கைகளும் காரணமாகும். நவயுகத்தை சிருஷ்டிப்பதற்கு புரட்சி தேவையென்று நான் சொல்வதன் தாத்பரியம்என்ன வென்றால், மனிதன் தனிப்பட்ட ஒரு முறையையோ, கொள்கையையோ, நம்பிக்கையையோபற்றி சிந்திப்பதையும், ஒரு மதம், ஒரு நாடு இவற்றைப்பற்றி கருத்தைச் செலுத்துவதையும் விட்டு விட்டு, உலகிலுள்ள மானிட வர்க்கம் பொதுவாக சுபீட்சமும் முன்னேற்றமும் அடைவதற்கான மார்க்கங்களைப் பற்றி சிந்திப்பதுவும் செயலாற்றுவதுமேயாகும். உலகில் இவ்விதமான சிந்தனைகளில் ஈடுபடுகிறவர்கள் மிகவும் சொற்பமாகவே இருக்கிறார்கள். இதைப்பற்றி வற்புறுத்தி பிரசங்கங்கள் செய்யவே நான் இங்கு வந்திருக்கிறேன்.

நான் இந்தியா வந்ததும் இங்குள்ள துக்ககரமான நிலைமைகளைக் கண்டு வருந்தினேன். இந்தியா தனது பரம்பரையான உயரிய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிலைமைகளை புதிய முறைகளில் சமாளிக்குமென்று கருதினேன். ஆனால் மற்ற நாடுகளைப்போலவே இந்தியாவும் நடப்பதைக் கண்டு மனம் புழுங்கினேன். அமைதி நிலவ வேண்டுமானால் வகுப்பு வித்தியாசங்களும் ஜாதி வித்தியாசங்களும் இந்நாட்டை விட்டு ஒழிய வேண்டும். நான் எந்த நாட்டையும் சேர்ந்தவனல்ல. உலகில் வாழும் ஒரு மனிதனே நான். பலநாடுகளுக்கிடையேயுள்ள அரசியல் வேற்றுமைகளாலும் பொருளாதார வேற்றுமைகளாலுமே உலகம் இவ்விதம் சீர்கேடான நிலையிலிருக்கிறது.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட் டெட்டிற்காக, 1947-ம்ஆண்டோபர் மீ 21ஆ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

"எவ்வித அபாயங்களையும் சமாளிப்போம்"

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வாரா என்று கேட்டதற்கு ஸ்ரீ சுஹ்ரவர்தி "ஆமாம், தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளும் மைனரிட்டிகளுக்கு உதவி செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இந்த சமயத்தில் சிந்து விலுள்ள மைனரிட்டிகள் சத்யாக்ரஹம் நடத்துவதற்கு அவசியமிருப்பதாக தோன்றவில்லை' என்று கூறினர்.

டில்லியில் ஸ்ரீ சுஹ்ரவர்தி

புதுடில்லி, அக். 18

மாஜி வங்க பிரதமர் ஸ்ரீ எச் எஸ். சுஹ்ரவர்தி இன்று மாலை லாகூரிலிருந்து விமானத்தில் டில்லி வந்து சேர்ந்தார். அவர் மூன்று தினங்களில் மீண்டும் லாகூர் செல்வார். அவர் மகாத்மாவைச் சந்தித்துப் பேசினர்.

சேனைக்கு அரசியல் கிடையாது

புதுடில்லி, அக். 18

"சேனையிலுள்ள எல்லாத் துருப்புகளும் சேவகர்கள். சர்க்கார் கட்டளையை நிறைவேற்ற

****

ஒருதலை, இரண்டு உடம்புகள்

எகிப்தில் அதிசயப் பிறவி

கெய்ரோ அக். 19

மூன்றுகுழந்தைகளையுடைய ஒரு எகிப்திய தாய் இன்று கெய்ரோ ஆஸ்பத்திரியில் ஒரு இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்தாள் இந்த இரட்டைக் குழந்தைகள் இரண்டு உடம்புகளும் ஒரே தலையுமுடைய அதிசயப் பிறவியாக இருக்கிறது. [ராய்ட்டர்]

****

வேண்டியது நம் கடமை. சேனைக்கு அரசியல் கிடையாது, அரசியல் முழுதும் சர்க்காரின் பொறுப்பு. சேவை ஒன்றே நம் கடன். இதை உயர்வு, தாழ்வு முதலிய வித்தியாசம் எதுவும் இல்லாமல் நிறைவேற்ற வேண்டியது நம் கடனுகும்" என்று இந்திய சேனாதிபதி ஸர். ராப் லாகாட் இன்று புதிய டில்லியில் ராணுவத்தினரின் கூட்டத்தில் பேசினர்.

பாக்கிஸ்தான் சேனாதிபதி லண்டன் செல்கிறார்

கராச்சி, அக் 18

பாக்கிஸ்தான் சேனாதிபதி மேசர்வி நேற்று மாலை டில்லியிலிருந்து கராச்சி வந்தார். வரும் வழியில் லாகூரில் அவர் பாக்கிஸ்தான் பிரதமரைச் சந்தித்துப் பேசினர். அவருடன் மேஜர் ஜெனரல் இர்விங்கும் பாதுகாப்பு இலாகா காரியதரிசி சிக்கந்தர் மிர்ஸாவும் வந்தனர். சேனாதிபதி ஞாயிற்றுக்கிழமை லண்டனுக்குப் பறந்து செல்கிறார்.

ஜெனரல் காரியப்பா லண்டன் பயணம்

லண்டன், அக். 17

ராணுவ விஷயங்கள் பற்றி கலந்து பேச மேஜர் ஜெனரல் காரியப்பா (இந்தியா) இங்கட்கிழமை இங்கு வருவார்.

மேற்கு வங்க கவர்னர்

கல்கத்தா, அக். 18

மேற்கு வங்க கவர்னர் திரு ராஜகோபாலாச்சாரியார் இன்று டார்ஜிலிங்குக்குப் பயணமானார்.

நீதிபதி ஷஹாபுத்தீன்

சென்னை, அக். 18

நீதிபதி ஸ்ரீ எம். ஷஹாபுத்தின் ஹைக்கோர்ட் நீதிபதி பதவியேற்க நவம்பர் முதல் வாரம் சென்னையிலிருந்து புறப்படுவாரெனத் தெரிகிறது.

திரு. இக்பால் ஷெய்தெய்

கராச்சி, அக். 18

27 வருடம் தேசப் பிரஷ்டவாழ்க்கையிலிருந்த திரு. இக்பால் ஷெய்தெய் கராச்சியில் தங்கியிருக்கிறார். தேசப் பிரஷ்டர்களாக இருந்த காலஞ் சென்ற மற்றும்பல இந்திய தேசபக்தர்களான சர்தார் அஜித் எலிங், மௌலானா ஒபகபதுல்லா சிந்தி இவர்களுடன் திரு ஷெய்தெய் இந்திய சுதந்திரத்திற்காக போராடியவர். இவர் சமீபத்தில் மத்திய கிழக்கு நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்த அங்கு சுற்றுப்பிரயாணம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org